# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 9: இதழ் 10 செப்ரெம்பர் 1957 விலை சதம்: 15



# அட்டைப் படம்

நயினாதீவிலுள்ள நாகேஸ்வரி ஆலயம் சரித்திர காலத்துக்கு அப்பாற்பட்ட காலத்து வழிபாட்டை எங்கட்கு நினைவூட்டுகிறது. நாகர்கள் வாழ்ந்தமையால் இது நாகதீவு எனப்பட்டது. புத்தர்பெருமானுடைய புனித பாதம் படியும் பாக்கியம் பெற்ற இடமும் இந்த நயினாதீவுதான். தென்னிலங்கையில் கதிர்காமம் இந்துக்களுக்கு யாத்திரைத் தலமாக விளங்குவதுபோல வட இலங்கையில் நாகதீவு பௌத்தர்களுக்கு யாத்திரைத் தலமாக விளங்குகின்றது. நாகதீவு இப்பொழுது நயினாதீவு என்றழைக்கப்படுகின்றது. இங்குள்ள நாகேஸ்வரி ஆலயத்தில் நடைபெறும் திருவிழாவுக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் இலங்கையின் நாற்றிசையிலுமிருந்து வந்து சேர்வது வழக்கம். இத்தகைய சிறப்புவாய்ந்த கோயிலுக்கு ஏற்றதொரு சித்திரத்தேர் இல்லாதிருந்தமை ஒரு பெருங் குறையாகவே யிருந்து வந்தது. இதனை யுணர்ந்த வடமாகாண அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா அவர்கள் நாகேஸ்வரி அம்மன் தேர்த் திருப்பணிச் சபை யொன்றினை நிறுவி, பெருஞ் செலவில் ஒரு சித்திரத் தேரினைக் கடந்த ஜுலை மாதத்தில் ஓடவைத்தார். இலங்கையிலே சித்திரக்கலையழகு பொழியும் இத்தேரினைப் பார்ப்பதற்காக இவ் வருடம் கோயிற் தேர்த் திருவிழாவின்போது வந்து சேர்ந்த சனத்தொகை அளவிடற்கரிது. இதனைக் கட்டி நிறைவேற்ற ஒன்றேகால் இலட்சம் ரூபா செலவாயிற்று. இதன் நிறை 35 தொன். மரக்கட்டைகளை மனிதன் தன் கைத்திறனால் சிரிக்க வைக்கிறான், அழவைக்கிறான், கும்பிட வைக்கிறான். மரச் சித்திரவேலைக்கு ஒரு கலைக்கூடமாக விளங்குகின்றது இந்தத் தேர். யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யும் கலைஞர்கள் இந்தத் தேரைப் பார்ப்பதற்காக நயினாதீவுக்கு நித்திய யாத்திரை செய்யவேண்டிய காலம் தூரத்திலில்லை. சித்திரவேலைப்பாடமைந்த தேரின் படத்தை இம்மாத ஸ்ரீ லங்காவில் வெளியிடுவதில் நாம் பெருமிதமடைகின்றோம்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கந்தளாய் சீனி உற்பத்தித் திட்டம் | 3 |
| 2. | இலங்கையில் அரிசி உற்பத்தி | 4 |
| 3. | முடிக்குரிய வனங்கள் சூறையாடப்படுகின்றன | 5 |
| 4. | நூல் நலனாய்வு | 6 |
| 5. | நயினாய்வு | 7 |
| 6. | பொலன்னறுவைத் திருவுருவங்கள் | 27 |


1—J. N. B 69178—5,508 (10/57)

# கந்தளாய் சீனி உற்பத்தித் திட்டம்

**சுயதேவையைப் பூர்த்திசெய்வதுடன் பலருக்கு வேலையும் கிடைக்கும்**

இலங்கையில் சீனி உற்பத்தித் தொழிலை விருத்தி செய்ய முடியுமா என்பது பற்றிய பரிசீலனைகள் 1949ம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டன. அங்குமிங்குமாகப் பல இடங்களில் உண்டுபண்ணப் பட்ட கரும்பின் விளைச்சல் பற்றி விரிவான பரீட்சைகள் நடாத்தப் பட்டிருக்கின்றன. இந்தப் பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்டு, கரும்புச் செய்கை, சீனி உற்பத்தி முதலியவற்றின் பொருளாதார அம்சங்கள் பற்றிய புத்தம் புதிய விரிவான அறிக்கையொன்று கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. வருடமொன்றுக்கு ஏறத்தாழ 20,000 தொன் சீனியை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு சீனி உற்பத்தித் தொழிற் சாலையைத் தாபிக்க 1952—53ம் ஆண்டின் மதிப்பீடுகளில் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் 1953ம் ஆண்டு ஏற்பட்ட கஷ்டமான நிதி நிலைமையின் விளைவாக இத்திட்டம் ஒத்திப்போடப்பட்டது.

அதற்குப் பின் இலங்கையின் சீனி இறக்குமதிகள் தொடர்ந்தாற் போல் அதிகரித்து வந்திருக்கின்றன. சமீபத்தில், கிட்டத்தட்ட 135,000 தொன் சீனியும், சுமார் 6,000 தொன் பழுப்பு சர்க்கரைச் சீனியும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. எனவே வருடமொன்றுக்கு சுமார் 20,000 தொன் சீனியை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையைக் கந்தளாயில் தாபிப்பதென இப்பொழுது உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இங்கு சுமார் 4,800 ஏக்கர் காணியில் கரும்புப் பயிர்ச்செய்கையை விவசாயப் பகுதி ஏற்கனவே ஆரம்பித்திருக்கிறது. இதிலிருந்து கிடைக்கும் சாதாரண அறுவடை இத்தொழிற்சாலைக்குப் போதுமானதெனக் கருதப் படுகிறது. கடந்த சில வருடகாலமாக இலங்கை தனக்குத் தேவையான சீனியைத் தொன் ஒன்று சராசரி 520 ரூபா செலவில் இறக்குமதி செய்து வந்திருக்கிறது. இறக்குமதி செய்யப்படும் சீனியின் தற்போதைய விலை தொன் ஒன்றுக்கு 800 ரூபா வாகும். இக் கரும்புப் பயிர்ச் செய்கையையும் தொழிற்சாலையையும் ஸ்தாபிப்பதால், இலங்கை தனக்குத் தேவையான சீனியில் சுமார் 15 சத வீதத்தை தான் இதுவரை செலுத்தி வந்த விலையை விட மிகக் குறைந்த விலைக்கு காலக்கிரமத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக விருக்கும். இதே நேரத்தில் சீனித் தொழிற் சாலையில் 200 பேருக்கு நிரந்தர தொழிலும் 100 பேருக்கு இடைக்கிடை தொழிலும் கிடைக்கவும், கரும்புத்தோட்டம், நெற்பயிர்ச் செய்கை, உப உணவுப் பயிர் உற்பத்தி முதலியவற்றில் மேற்கொண்டும் 2,000 பேருக்குத் தொழில் கிடைக்கவும் இத்திட்டம் வழி கோலும்.

தற்பொழுது விளைவிக்கப்பட்டிருக்கும் கரும்புச் செடிகள் 1959ம் ஆண்டு அறுவடைக்குத் தயாராயிருக்கும். அந்நேரத்தில் தொழிற்சாலையும் சீனி உற்பத்திக்குத் தயாராயிருக்கும்.

இத் தொழிற்சாலையை அமைக்க உலகின் எல்லாப் பாகங்களிலுமிருந்து கேள்வி ஒப்பந்தப் பத்திரங்கள் கோரப்பட்டன. இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, செக்கோசிலவாக்கியா, ஒல்லாந்து ஆகியவற்றுக்கும், மற்றும் பல நாடுகளுக்கும் கேள்வி ஒப்பந்தப்பத்திரங்களை அனுப்பி இவற்றில் ஆகக் குறைந்த ஒப்பந்தப் பத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டது. செக்கோசிலவாக்கியாவைச் சேர்ந்த டெக்னோபோர்ட் கம்பெனி இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்காகும் செலவு ஏறக்குறைய 162,000,00 ரூபாவாகும். இலங்கை-செக்கோசிலவாக்கியா பொருளாதாரக் கூட்டுறவு ஒப்பந்தத்திற்கிணங்க இத்தொழிற்சாலையமைப்பு ஏற்படும். இவ்வொப்பந்தத்தின்படி இயந்திரங்களுக்கான தொகையை அரசாங்கம் 5 வருடத் தவணைக்குள் செலுத்தலாம்.

இத்தொழிற்சாலையைத் தாபிப்பதற்கான முதலுடன் அதனைக் கொண்டு நடாத்துவதற்கான செலவுகளின் மொத்தம் 21,500,000 ரூபாவென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. விவசாயப் பகுதியின் நிர்ணயப்படி இத் தொழிற்சாலைக்கு வழங்கப்படும் கரும்பு ஒரு தொன்னுக்கு 25 ரூபா செலவாகும். முதல் வருடத்தில் ஒரு தொன் சீனி உற்பத்தி செய்ய 531 ரூபா செலவாகும். இது படிப்படியாகக் குறைந்து 1964ம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு 395 ரூபாவே செலவாகும். அவ்வருடத்தில் உற்பத்திச் சாலையிலிருந்து ஆகக் கூடிய சீனி உற்பத்தி செய்யப்படுவதோடு, கரும்புத் தோட்டங்களும் பெருமளவு கரும்பைத் தரும். முதலாம் வருடத்தில் ஒரு தொன் சீனி 495 ரூபாவுக்கு விற்கப்படுவதால் 202,700 ரூபா நஷ்டமேற்படலாமென எதிர்பார்க்கப் படுகின்றது. இரண்டாம் வருடத்தில் நஷ்டம் நீங்கலாக 286,050 ரூபா இலாபமும், மூன்றும் வருடத்தில் 868,250 ரூபா இலாபமும், ஆறும் வருடத்தில் 1,924,930 ரூபா இலாபமும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# இலங்கையில் அரிசி உற்பத்தி

### ஜப்பானிய முறை நற்பலனளித்துள்ளது

இலங்கையில் ஏக்கர் ஒன்றின் அரிசி அறுவடை, தென்கிழக் காசியாவிலுள்ள மிகவும் உயர்ந்த அறுவடைக்குச் சமமானதாக விளங்குகின்றது. இதனை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கான வழிவகைகளும் பிரத்தியட்சமாகக் காணப்படுகின்றன. இத் தகவல் கமத்தொழில் அதிபதியின் 1956ம் ஆண்டு நிர்வாக அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

நவீன முறைகள் கையாளப்பட்டதனலேயே இத்தகைய வெற்றியை ஈட்டிக் கொள்ள முடிந்ததென்றும் வேறெந்த அம்சத்தையும் விட, விவேகத்துடன் பசளை உபயோகிக்கப்படுவதைக்கொண்டு அரிசி அறுவடைகளை மேலும் அதிகரித்துக் கொள்ள முடியு மென்றும் அவ்வறிக்கை கூறுகின்றது. கடந்த வருடத்தில் 312,780 ஏக்கரில் 15,163 தொன்களுக்கு மட்டுமே பசளை உபயோகிக்கப்பட்டது. இலங்கையில் நெற்பயிர் செய்யப்படும் 1,300,000 ஏக்கர் நிலத்தில் மிகச் சிறந்த அறுவடைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானல் குறைந்தபட்சம் 185,000 தொன் பசளையாவது தேவைப்படும்.

### பசளை உபயோகம்

இலங்கையிலுள்ள பல்வேறு நிலங்களும் பசளை உபயோகத்துக்கு எவ்வளவு இணக்கமானவை என்பதைக் குறிக்கும்படங்கள் கடந்த காலத்தில் திருப்திகரமாக தயாரிக்கப்படவில்லை யென்றும் பசளை பூரணமாக உபயோகித்துக்கொள்ளப்படவில்லை. யென்றும் அவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது. கடந்த வருடத்தில் விவசாயிகளின் நெல்வயல்களில் ஒரு விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

பசளைக்கு மிகவும் இணக்கமான விதைநெல் உபயோகிக்கப்பட்டு, களை சிறந்த முறையில் கட்டுப்படுத்தப்பட்டால் மட்டுமே பசளையின் முழுப் பலனையும் பெற்றுக்கொள்ள முடியுமென்பதும் உணரப்பட்டது.

### ஜப்பானிய முறை

கடந்த வருடத்தில், ஜப்பானிய நெற்பயிர்ச் செய்கை முறை விஸ்தரிக்கப்பட்டதே ஆகக் கூடிய பலனளித்த அபிவிருத்தி என்று, நெல் விளைச்சல் பற்றி குறிப்பிடுகையில் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது. இம் முறைப்படி அவ்வருடத்தில் ஏறக்குறைய 14,500 ஏக்கர் பயிர்செய்யப்பட்டது. அதற்கு முந்திய வருடத்தில் 2,300 ஏக்கர் நிலத்தில் மட்டுமே ஜப்பானிய முறை கையாளப்பட்டது. ஜப்பானிய முறையைக் கொண்டு ஏக்கர் ஒன்றுக்கு 60 புசல் துவக்கம் 150 புசல்வரை அறுவடை செய்யப்பட்டது. ஏக்கர் ஒன்றுக்கு சராசரி அறுவடை சுமார் 70 புசல் ஆகும்.

# படித்த வாலிபர்களுக்கு நிலம்

படித்த வாலிபர்களுக்கு முடிக்குரிய காணிகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டதன் பயனுகப் பெரியகுடியேற்றத் திட்டங்களில் 10 வீதமான பங்கீட்டுக் காணிகள் படித்த வாலிபர்களுக்காக விடப்பட்டிருக்கின்றன. எனினும் நாளுக்கு நாள் பெருகிவரும் படித்த வாலிபர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் அதிகரித்து வருகின்றமையால் அரசாங்கம் படித்த வாலிபர்களுக்கே விசேடமாக குடியேற்றத் திட்டங்களைத் திறக்கத் திட்டமிட்டுள்ளது. காலி மாவட்டத்தில் நாப்பே, கொட்டாவ என்னுமிடங்களில் இரு மேட்டு நிலத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 50 பங்கீட்டுக் காணிகளையுடையன. நாப்பே திட்டம் ரப்பர் வளர்ப்புக்கும் கொட்டாவ திட்டம் தேயிலை வளர்ப்புக்கும் விடப்படும். ஒவ்வொரு திட்டத்திலும் சாதாரண விவசாயிகளுக்கு வழங்குவதைப் போன்றே ரப்பர் காணி 2½ ஏக்கர் அல்லது ½ ஏக்கர் தேயிலைக் காணி வாலிபர்களுக்கு வழங்கப்படும்.

(அ) காணி வேண்டுமெனக் கோருபவர்களின் தொகையைக் கொண்டு குடியேற்றத்துக்காக ஒதுக்கப்படும் நிலத்தின் அளவு கட்டுப்படுத்தப்படும்.

(ஆ) ஒரு வாலிபர் தான் கற்ற கல்வியைக் கொண்டு ஒரு விவசாயி தனது காணியிலிருந்து பெறும் வருமானத்திலும் கூடிய வருமானத்தை அதே அளவு காணியிலிருந்து பெறமுடியயுமாகையால்,

விவசாயிகளுக்காகப் பாரதீனப்படுத்தும் அளவிலேயே காணிகள் பாரதீனப்படுத்தப்படுகின்றன.

# முடிக்குரிய வனங்கள் சூறையாடப்படுகின்றன

வனப்பாதுகாவல் அதிபர் தரும் தகவல்

கடந்த வருடத்தில் ஏறக்குறைய 4,900 காடுகள் சம்பந்தமான குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 1955ம் ஆண்டில் இப்படிப்பட்ட 5,300 குற்றங்களே கண்டுபிடிக்கப்பட்டன. கடந்த வருடத்தில் சுமார் 900 வழக்குகள் மட்டுமே தொடரப்பட்டன. இவற்றுள் 10 வழக்குகளில் மட்டுமே அபராதம் விதித்தற்குரிய சலுகை இல்லாமல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 763 வழக்குகளில் அபராதப் பணமாக ஏறக்குறைய 21,500 ரூபா அறவிடப்பட்டது. 1,700 வழக்குகள் வனப்பகுதியால் தீர்த்துவைக்கப்பட்டன. இவ்வழக்குகளின் மூலம் கிட்டத்தட்ட 52,000 ரூபா நட்டஈடு அறவிடப்பட்டது.

மரங்களை கள்ளத்தனமாக வெட்டி வீழ்த்துதல், வன ஒதுக்கு நிலங்களையும் உத்தேசிக்கப்பட்டுள்ள வன ஒதுக்கு நிலங்களையும் சுவீகரித்துக் கொள்ளுதல் ஆதியன சம்பந்தமான குற்றங்களே இவற்றுட் பெரும்பாலானவை.

காடுகளைச் சேதமடையாது பாதுகாக்கும் பிரச்சினையும், இக்காடுகளிலுள்ள மரங்கள் ஒழுங்காகக் களவாடப்படுவதைத் தடுப்பதுவும் விசேஷமாக தாழ்ந்த ஈரலிப்பு மண்டலத்தைச் சேர்ந்த ஜனப்பெருக்கம் அதிகமாகவுள்ள பிராந்தியங்களில், மிகவும் கஷ்டமாகியுள்ளதென வனப்பாதுகாவல் அதிபர் தமது கடந்த வருட நிர்வாக அறிக்கையில் கூறுகிறார். இந்த வனஒதுக்கு நிலங்களில் இலகுவாகப் பிரவேசிக்கக் கூடியதாகவுள்ளதையும், நல்ல வீதிப் போக்குவரத்து வசதிகள் இருப்பதையும் கள்ளத்தனமாக வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்களை ஏற்றிச் செல்வதற்கு உடனடியாக லொறிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதையும் இந் நடவடிக்கையிலீடுபட்டுள்ளவர்களுக்குக் கிடைக்கும் நல்ல ஆதாயத்தையும், தற்போதுள்ள சட்டங்களின் கீழ் திறமையாகவும் யதார்த்தமான முறையிலும் கட்டுப்பாட்டு வேலையை மேற்கொள்ள முடியாதிருப்பதற்கான அம்சங்களாக அவர் எடுத்துக் காட்டுகிறார். தவறான பாதையில் சென்றுகொண்டிருக்கும் ஸ்தல தலைவர்கள் சிலரால் ஊக்குவிக்கப்பட்ட அராஜரீகப் போக்கு, முக்கியமாக தென் பிரிவிலுள்ள வன ஒதுக்கு நிலங்களிலும் உத்தேசிக்கப்பட்ட வன ஒதுக்கு நிலங்களிலும் மரங்கள் கள்ளத்தனமாக வெட்டி வீழ்த்தப்படுவதைக் கடந்த வருடத்தில் அதிகரிக்கச் செய்திருக்கிறதென வனப்பாதுகாவல் அதிபர் கூறுகிறார். மேலும் நிரந்தரமாகக் குடியேறுவதற்கு நிலத்தைப் பெற்றுக் கொள்ளும் ஒரு முயற்சியில் முடிக்குரிய காடுகளைச் சுவீகரித்துக் கொள்வதற்காகக் கிராமவாசிகள் ஒன்று கூடி ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

வளவை கங்கை ஒதுக்கு நிலங்களைச் சுற்றி இந்நடவடிக்கை அதிகரித்திருப்பது, இலேசான போக்குவரத்து வசதியுள்ள எம்பிலிப்பிட்டி, திம்பொல்கெட்டி ஆகிய வாட்சி மண்டலப் பிரிவுகளில், ஒரு விசேஷ அம்சமாக விளங்குகின்றது. மனச்சாட்சியற்ற மர வியாபாரிகளால் பண உதவியளிக்கப்பட்ட நன்கொடைகளின் மூலம் தனிப்பட்ட காணிகளுக்குத் தங்களுக்குரித்திருக்கிறதென்ற தைரியத்துடன் இப்பிரதேசங்களில் இப்பொழுது கிரமமாக மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன வென்றும் வனப்பாதுகாவல் அதிபர் கூறுகிறார். தனிப்பட்டவர்களின் காணிகளிலுள்ள மரங்களை வெட்டுவதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் உதவியுடன் முடிக்குரிய காணிகளில் கள்ளத்தனமாக வெட்டி வீழ்த்தப்பட்ட ஏராளமான மரங்களும் உள்நாட்டுச் சந்தைகளில் விற்கப்படுகின்றன.

எரிப்பதற்கும் இதர வேலைகளுக்கும் மரங்களைப் பெற்றுக்கொள்வதில் வருங்காலத்தில் எம்மை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளையும் வனப்பாதுகாவல் அதிபர் தமது நிர்வாக அறிக்கையில் குறிப்பிடுகின்றார். வனங்களின் மூலதனங்கள் சுவீகரித்துக் கொள்ளப்படுவதாலும், வனங்களின் விஸ்தீரணம் துரிதமாகக் குன்றி வருவதாலும், சனத்தொகை அதிகரித்து வருவதாலும், இக்காரணங்களால் மரங்களுக்கேற்பட்டுள்ள அதிக கிராக்கியினாலும் எரிப்பதற்கும் இதர வேலைகளுக்கும் தேவையான மரங்களைப் பெற்றுக்கொள்வதுமென் மேலும் கஷ்டமாகிக்கொண்டே வருமென்பதை எதிர்பார்க்க வேண்டியிருக்குமென்று அவர் கூறுகிறார். ஏற்கெனவே தட்டுப்பாடேற்பட்டுள்ள நீண்ட நாள் உழைக்கக்கூடிய உரமுள்ள மரங்களைப் பெற்றுக் கொள்வது வரவரக் கஷ்டமாகக்கூடும். கிடைக்கக் கூடிய மரங்களை பூரணமாகவும் அனாவசியமான கழிவுகள் இல்லாமலும் உபயோகப்படுத்திக்கொள்வதைக் கொண்டே மரங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியுமென்று அவர் கூறுகிறார். மரங்களின் உபயோகத்தை அதிகரித்துக்கொள்வதானால் அவற்றை சரியான முறையில் பதப்படுத்தி பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

கடந்த வருடக் கடைசியில் கிட்டத்தட்ட 2,760,000 ஏக்கர் காடுகள் வனப்பாதுகாவல் அதிபரின் பகுதியின் கீழ் இருந்தன. இது இலங்கையில் முழு நிலப்பரப்பிலும் 17,03 சதவிகிதமாகும்.

## மற்றோர் வைத்தியக் கல்லூரி

இரண்டாவது வைத்தியக் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டுமென்ற ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இக்கல்லூரி பேராதனையில் நிறுவப் படும். மொத்தம் 5 கோடி ரூபா இதற்குச் செலவாகும் என அனுமானிக்கப்பட்டிருக்கிறது.

இக்கட்டட அமைப்பின் முதற்படித்துறை வேலைகள் சீக்கிரம் மேற்கொள்ளப்படும். இதற்கு ரூபா 90 லட்சம் செலவிடப்படும். அடுத்த மூன்று வருடங்களுள் இவ் வேலை முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இவ்வருடத்தில் ஆரம்பவேலைகள் சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடத்தப்படும். ஒரு கட்டட அமைப் பாலோசகரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பொது வேலைப்பகுதி இவ் வருட வேலைகளுக்கு ரூபா 10 ஆயிரம் போதுமெனத் தீர்மானித்திருக்கிறது.

---

## சேனையூர் சனசமூக நிலையம்

1957 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20 ந் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் திரு. சி. நடராசா ஆசிரியர் அவர்களின் தலைமையில் சேனையூர் சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் ஆரம்பமாகியது.

பின்வருபவர்கள் சங்கத்தின் உத்தியோகஸ்தர்களா கத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் : திரு. சி. நடராசா.
உப-போஷகர் : திரு. ந. நடராசா.
தலைவர் : திரு. வ. சிவபாலசுந்தரம்.
உபதலைவர் : திரு. க. இராசரத்தினம்.
காரியதரிசி : திரு. இ. கோணமலை.
உபகாரியதரிசி : திரு. க. துரைரத்தினசிங்கம்.
தனாதிகாரி : திரு. வீ. சோமசுந்தரம்.

6 பேர்கள் கொண்ட ஓர் நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டபின் சங்கவளர்ச்சிபற்றிக் காரியதரிசி யால் விளக்கிக் கூறப்பட்டது.

ஒரு கிராமத்தின் அபிவிருத்தி கிராமத்தின் கிராமாபிவிருத்திச் சங்கங்களிலும் சனசமூக நிலையங் களிலுமே தங்கியிருக்கின்றது. ஆகையால் இப்பேர்ப் பட்ட சங்கங்கள் ஒற்றுமையுடனும் விடாமுயற்சி யுடனும் செயலாற்றினாற்றான் முன்னேறிச் செல்லும் உலக சமுதாயத்துடன் இணைந்து செல்லமுடியும் என்று போஷகர் தமது குறிப்புரையில் கூறினர்.

ஈற்றில் தலைவர் வேண்டுகோளுடனும் கடவுள் வணக்கத்துடனும் கூட்டம் இனிது கலைந்தது.

## நூல் நலனாய்வு

### மொழித் தேர்ச்சியும் இலக்கணமும்

ஆக்கியோர் : கு. வி. செல்வத்துரை,
க. வீரகத்தி.

கிடைக்குமிடம் : கலைவாணி புத்தக நிலையம்,
கொழும்பு 10.

விலை ரூபா 2/-


"தமிழ் மொழி வாழுகிறது—தமிழ் வாழும்" என்று தற்காலத்தில் பலரும் வெறுமனே சொல்லித் திரிகின்றார் கள். அதே வேளையில், தமிழ் மணங் கமழாத—இலக் கணந் தழுவாத பல நூல்கள், வெளியீடுகள் ஆதியன வும் வெளிவந்துகொண்டே யிருக்கின்றன. இந்த நிலைமை நீடித்தால், இன்னுஞ் சில வருடங்களுக்குப் பின்பு வாழும் தமிழ் மக்கள் ஒருவித கொச்சைத் தமிழைக் கற்க வேண்டியோராகவுங் கூடும்.

தமிழ் நாட்டில் பண்டு தொட்டு இலக்கணந் தெரிந்த பல பெரியோர்கள் செய்து வந்த சேவையே—அதாவது அவர்கள் அளித்த இலக்கண, இலக்கிய நூல்களே இக் காலச் சந்ததியாராய நாம் நற்றமிழைக் கற்க உதவு கின்றன. இஃதே போல் நமது பிற்காலச் சந்ததி யாருக்கும் தமிழைத் தமிழாகவே காப்பாற்றிக்கொடுக்க வேண்டியது நமது கடமையாகும்.

நமது கடமை யென்பதைப் பெரும்பாலும், நம் மத்தியிலேயுள்ள இளவயதினரின் கடமையென்றே கூறுதல் பொருத்தமாகும். இந்த இளவயதினர்— பள்ளிச் சிறார்கள், சிறுவயதிலேயே மொழிப் பிரயோகத் தில் தேர்ச்சி பெறுதல் அவசியம். இந் நன்னோக்கத்தை மனதிற் கொண்டு, தமிழாற்றல் வாய்ந்த இரு ஆசிரியர் கள் ஆறும் ஏழாம் வகுப்புகளுக்கென மேற்போந்த புத்தகத்தை எழுதி உதவியுள்ளார்கள். பாடசாலையில், ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்கள் இதனைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு, இப்புத்தகம் வித்தியா பகுதியின் புதிய பாடத் திட்டத்திற்கமைவாகவும் எழுதப்பட்டுள்ளது.

சுயபாஷைகள் முக்கியத்துவம் பெற்றுவரும் ஓர் அருந் தருணத்தில் இத்தகைய நூல்கள் வெளிவருவதை நாம் பாராட்டுகிறோம். ஆசிரியர்களும், மாணவர்களும் இந்நூலுக்கு ஆதரவளிப்பதன் மூலம் இதனை ஆக்கி யோரும், இவர்களைப்போன்ற பலரும் ஊக்கமேலிட்டு, உற்சாகமடைந்து மேலும் பல நூல்களை நம் மக்களுக்கு இயற்றித்தர உதவுவர் என நம்புகிறோம்.

"தேவர் கோன்"



நயினுதீவு நாகேஸ்வரி அம்பாள் கோயிலின் முகப்புத் தோற்றம்

# நயினு தீவு

குல. சபாநாதன்


எவர் எவர் எவ்வெச்சமயத்தைக் கைக்கொண்ட போதிலும், இறுதி இலட்சியம் ஒன்றே என்பதைக் காட்டுதற்கான தலங்கள், உலகாயதம் பரவிவரும் இக்காலத்திலும் உலகெங்கணும் இருக்கத்தான் செய்கின்றன! எங்கள் சிறிய இலங்கையிலும் கானகமத்தியில் விளங்கும் கதிர்காமம், வானுறவோங்கும் சிவனொளிபாதம், ஆழ்கடல் சூழ் நயினுதீவு என்பன எம்மதத்தவர்க்கும் சம்மதம் கொடுப்பனவாய் அமைந்துள்ளன.

நயினுதீவைப்பற்றிப் பல ஐதிகங்களுள. அத்தீவிலுள்ள நாகேஸ்வரி ஆலயத்தைப்பற்றியுள்ள ஐதிகங்களும் மிகப்பல. இஃது எப்பொழுது தோன்றியது? எவ்வாறு விருத்தியாகிப் புகழ்பெற்றது? என்னும் இன்னோரன்ன விஞக்களுக்கு ஆராய்ச்சியாளர் திருப்தியடையக்கூடியதாக விடைகூறும் சரித்திர நூல்கள் இல்லை. எனவே கர்ண பாம்பரையாக வழங்கும் கதைகளைக்கொண்டும் பிற்காலத்தவர் ஆங்காங்கு எழுதிய குறிப்புக்களைக்கொண்டும் இத்தலத்தின் வரலாற்றை ஊகிக்கமுடியுமேயன்றி நிதார்த்தமாக அதுபற்றிக் குறிப்பிடத் துணியவொண்ணுது.

நயினுதீவுக்கு நந்தாப் புகழையளிப்பது ஆண்டுள்ள நாகேஸ்வரி ஆலயமாகும். இது நாகம்மாள் கோயில், நாக பூஷணியம்பாள் கோயில் எனவும் வழங்கப்படும். யாழ்ப்பாணத்திலிருந்து காரைதீவுக்குச்சென்று அங்கிருந்து வத்தைகள், "போட்டுகள்" "மோட்டார் லாஞ்சிகள்" மூலமாக யாத்திரீகர்கள் நயினுதீவுக்குச் செல்வது வழக்கம். புகழ்பெற்ற இச்சிறு தீவின் சுற்றளவு ஏறக்குறைய நாலு மைல்வரையிருக்கும்.

### நாகம் அர்ச்சனை செய்தது

முன்னொருகாலத்தில் நயினுதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்துவந்ததாம். ஒருநாள் அந்நாகம



" பொங்கிடு நெடுந்திரைப் புணரிநாற்றிசையும் பொருந்தநடு மேவியுலகிற் புகழ்பெருகு நயினை மா நகரினிலிருந்துமிகு புதுமைதரு புனித தாயின் " கருணை தவழும் திருக்கோலம்.

அர்ச்சனை செய்தற்பொருட்டுப் பூக்கள் கொய்வதற்காகச் செல்லும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும்பொருட்டு எதிர்த்துவந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின்மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமை கொண்டிருக்கும் சமயத்தில், அக்கடல் வழியாக மரக்கலத்திற் சென்ற வைசியன் ஒருவன் அந்நாகத்தின் பயத்தைக் குறிப்பாலுணர்ந்து, மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான். "உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து என்முன் வைத்தால் விலகுவேன்" என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டுக்குத் திரும்பினான். நடந்தவற்றையெல்லாம் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரைகொள்ளும்பொழுது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிது நேரம் கூசச்செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப்பார்த்தபொழுது நாகரத்தினக் கற்கள் அவ்வறையில் இருப்பதைக் கண்டார்கள். நயினாதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இருந்தவாறென்னேயென அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரைசெய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச்சென்று வடகிழக்குக் கடற்கரையில் நாகம்மாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள். ஏழு வீதிகளும் கோபுரங்களும் அமைத்தார்கள். நயினாப்பட்டர் எனும் பிராமண குருவைப் பூசகராக நியமித்தார்கள். இத்தீவுக்கருகில் இப்பொழுதும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் என இரு கற்களைப் பொதுமக்கள் காட்டுகின்றார்கள். இக்கற்கள் அலைகளினால் மோதுண்டு இயற்கையாகப் பெற்ற வடிவங்களை ஆதாரமாகக்கொண்டு மேற்கூறிய கதைகள் உருவாகியிருத்தலும் கூடும்.

நயினாதீவு பண்டைக்காலத்திற் சிறந்த ஒரு துறைமுகமாக விளங்கிற்றென்பதற்கையமில்லை. தென்னிந்தியாவிலிருந்து அந்நிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையில் நயினாதீவு இருக்கின்றமையால், தமிழ் நாட்டுக் கப்பல்களும் அந்நிய நாட்டுக் கப்பல்களும் இத்துறையிற்றங்கியே சென்றிருக்கக்கூடும். இத்தீவின் மேற்குக் கடற்கரையில் படகுத்துறை என்ற பெயரால் ஓர் இடம் இன்றும் அழைக்கப்படுகின்றது. மேற்குப் பகுதிக்கடல் மிகவும் ஆழமாகவும் பெரிய கப்பல்கள் போக்குவரத்துச் செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது. மேலும் நாகம்மாள் கோயிலிற் கண்டெடுக்கப்பட்ட சிலாசாசனமும் இக்கொள்கையினை வலியுறுத்துகின்றது. இச்சாசனம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொலனறுவையிலிருந்தரசாண்ட மகா பராக்கிரமவாகு என்பவனால் பொறிக்கப் பெற்றது. இக்கடலில் நாவாய்கள் காற்றில் அகப்பட்டு உடைந்து போனால் எவ்வித முறை கையாளப்படவேண்டுமென்பது இச்சாசனத்தில் விவரிக்கப்பட்டுளது. எனவே கப்பல்களிற் போக்குவரத்துச் செய்தவர்களும் வணிகரும், நயினாதீவிலுள்ள ஆலயத்தை தரிசித்திருத்தல் கூடுமென ஊகிக்க இடமுண்டு.

### சீனத்துச் சாடிகள்

சில வருஷங்களுக்குமுன் பப்பரவன் சல்லி என்னுங் காணியிற் கிணறு ஒன்று தோண்டியபோது சில சாடிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றைக் கொழும்பு நூதனசாலைக்கனுப்பிவைத்தபொழுது அவை சீன தேயத்துச் சாடிகள் எனவும், 12ம் நூற்றாண்டிற் செய்யப்பட்டவையாயிருத்தல் கூடுமெனவும், நூதனசாலை அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். பௌத்த மதம் இலங்கையிற் பரவியிருந்த காலத்தில் புங்குடுதீவு [புவங்குதிவயின] நயினாதீவு [நாகதிவயின] ஊருத்துறை [தன்னிதிவயின] அனலைதீவு [அக்னிதிவயின] காரைதீவு [காறதிவயின] முதலிய தீவுகள் பிரபல்யமுற்று விளங்கின. பௌத்தர்கள் இத்தீவுகளில் விகாரைகளைக் கட்டினார்கள். நயினாதீவிலும் ஒரு விகாரை கட்டப்பெற்றது. ஆனால் அந்த விகாரை இப்பொழுது அழிவுற்றுக்கிடக்கின்றது. எனினும் புத்தர் கோயிற்குளம், புத்தர் கோயிலடி, புத்தர் திடல் எனும் இடப்பெயர்கள் பண்டைக்கோயிலின் பெருமையை நினைவூட்டும் சாதனங்களாக இன்றும் மிளிர்கின்றன. புத்தர் திடலில் துளசிச் செடிகள் இப்பொழுதும் தாமே முளைத்து அழிதலையும் காணலாம்.

### மணிமேகலா சம்பந்தம்

மணிமேகலா தெய்வம் இத்தீவுகளைப் பாதுகாத்து வந்ததென்ற ஐதிகம் ஒன்றுண்டு. மணிமேகலா தெய்வமானது அரக்கர் வாதைபண்ணுதபடி இந்திரன் ஏவலாலே சில தீவுகளைப் பாதுகாத்துக்கொண்டிருந்தது. மணிமேகலை மணிபல்லவத்தைத் தரிசித்தாளென மணிமேகலையெனும் காப்பியம் கூறுகின்றது. மணிபல்லவம் என்பது காவிரிப் பூம்பட்டினத்திற்குத் தெற்கே 30 யோசனையளவிலுள்ள ஒரு சிறு தீவு என்பது மணிமேகலை யெனும் நூலிற் கூறப்பட்டுள்ளது. மணிமேகலை மணிபல்லவத்தில் இறங்கி அமுதசுரபி யெனும் அக்ஷயபாத்திரத்தைப் பெற்றாள் என மேற்கூறிய நூல் தெரிவிக்கின்றது. மகாவம்சத்தில் இவ்வரலாறு சிறிது வேறுபடக்கூறப்பட்டுளது. நாக தீபத்தைப்பற்றி புத்த ஜாதகக்கதைகளில் அநேக குறிப்புகள் காணப்படுகின்றன.

### நாக தீவு எது ?


நாகதீவு அல்லது மணிபல்லவம் எதுவாயிருக்கலாம் என்பதுபற்றி அபிப்பிராய பேதமுண்டு. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுமே மணிபல்லவம் அல்லது நாகதீவு என்றழைக்கப்பட்டதெனக் காலஞ்சென்ற முதலியார் இராசநாயகம் அவர்கள் கருதினர்கள். டாக்டர் போல் பீரிஸ் அவர்களும் இக்கொள்கையை ஆதரித்து எழுதியுள்ளார். வல்லிபுரக்கோயிற் பொற்சாஸனத்தைப்பற்றி டக்டர் எஸ். பரணவிதான அவர்கள் எழுதிய கட்டுரையிலும் இக்கொள்கையினை வலியுறுத்தியே எழுதியுள்ளார். இப்பொழுது நயினதீவு எனப்படுவதே பண்டைக்காலத்தில் மணிபல்லவம், நாகதீவு, மணித்தீவு எனப்பல பெயர்களால் வழங்கப்பட்டதென்பர் பிறிதொருசாரார். இக்கொள்கையினை ஆதரித்து திரு. செல்லையாதில்லையம்பலம் அவர்கள் "நற்றவம் மிக்க நயினதீவு" எனும் கட்டுரையொன்று எழுதியுள்ளார். இங்ஙனம் ஆராய்ச்சியாளர் வாதமிடினும் பொதுஜனங்கள் இவற்றைப் புறக்கணித்து நயினதீவையே புண்ணிய ஸ்தலமாகக் கொண்டு வழிபடுகின்றனர். பௌத்தர்களும் தங்கள் புத்தர் பெருமானின் பாதம்படிந்த புண்ணியஸ்தலமாகிய நாகதீவு இந்த நயினதீவே யென்று கருதி அங்கே ஒரு விகாரை கட்டியுள்ளார்கள். இப்பொழுது ஏறக்குறைய நாடோறும் யாத்திரீகர்கள் அநேகர் செல்கின்றனர். எதிர்காலத்தில் இந்த விகாரை பல்லாயிரக்கணக்கானோர் பக்தியுடன் சென்று வணங்கும் ஆலயமாக விளங்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. கடலோட்டுகாதை, வெடியரசன் நாடகம், வையாபாடல் முதலியவற்றை நோக்குமிடத்து நயினதீவு யாத்திரை ஸ்தலமாக விளங்கியிருத்தல் கூடுமெனக் கருத இடமுண்டு.

நாக நயினர் அல்லது நாக தம்பிரான் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்தலமாதலின் இது நாக நயினதீவு எனப் பெயர்பெற்றதெனவும் கொள்ளலாம்.

### கோயிலை இடித்தல்

புராதனப் பெருமைவாய்ந்த நாகேஸ்வரி ஆலயம் வர்த்தகரின் பொருள் கொண்டு விஸ்தரிக்கப்பட்டு விளங்குவதைக் கண்ட போர்த்துக்கீசர் இதனைச் சும்மா விட்டுவைப்பார்களா ? இந்த ஆலயத்தில் உள்ள பொருள் பண்டத்தை அபகரிக்கும் பேராசைபிடித்த போர்த்துக்கீசர் இதனை அழிக்கத் தொடங்கினர். கோயில் தரைமட்டமாக்கப்பட்டது. இந்த வன்கணாளரின் கொடிய செயலைக் கண்டு சைவ மக்கள் அனலிடைப்பட்ட புழுப்போலத் துடிதுடித்தனர். தாங்கள் பக்தியுடன் வழிபட்டுவந்த மூர்த்திகளையும் பூசைப் பாத்திரங்களையும் தேர்களையும் அந்நியர் தீண்டக்கூடாதெனக் கருதிய சைவ நன்மக்கள் அவற்றை வெவ்வேறிடங்களில் ஒளித்து வைத்தார்கள். அம்பாளை மேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஆலமரப் பொந்தில் வைத்து வழிபட்டு வந்தனர். இந்த மரம் "அம்மாள் ஒளித்த ஆல்" என வழங்கப்பட்டதென ஓர் ஐதீகமுண்டு. அந்நியர் கோயிலை இடித்தபோதிலும் அம்பாள் வழிபாட்டை நிறுத்த முடியவில்லை. அவள் நயினதீவு மக்கள் ஒவ்வொருவருடைய உள்ளமாகிய பெருங்கோயிலில் உறுதியான இடம்பெற்று விளங்கினள். அந்நிய மதத்தினர் இன்னல் செய்தவிடத்தும் நயினதீவு மக்கள் சைவப்பற்றினைக் கைவிடவில்லையென்பதனை இது உறுதிப்படுத்துகின்றது. இக்கோயிலை அந்நியர் அழிக்க வந்தபொழுது கோயிற் தேர் தானகவே உருண்டு மேற்குக் கடலில் ஆழ்ந்துவிட்டதாம். ஒரு சமயம் அக்காலச் சைவமக்கள் அதனைக் கடலினுள் தள்ளிவிட்டிருத்தலும் கூடும். சிற்சில காலங்களில் தேர்முடி கடலில் பௌர்ணிமைத் தினத்தில் தெரிகிறது என்ற ஒரு கதையும் அடிக்கடி

போர்த்துக்கீசர் கோயிலின் மேல் ஏறிநின்று கோயிலை இடித்து விழுத்துவதைத் தத்ரூபமாகக் காட்டும் சித்திரம்



கேட்கப்படுவதுமுண்டு. இது பண்டைக்காலத்தில் தேர் முதலியன கடலினுள் தள்ளப்பட்ட நிகழ்ச்சியின் எதிரொலியாக இருக்கலாம். இவ்வாலயத்திற்குச் சமீப மாகவிருக்கும் தென்னந் தோப்புக்களிற் சில விடங் களிற் கிண்டிப் பார்த்தபொழுது, தரையின்கீழ் பழைய கட்டடங்கள் காணப்பட்டன. திருக்குள மொன்று வெட்டியபொழுது கோயிற் பூசைக்குரிய வெண்கலப் பொருள்கள் சில வெளிக்கிளம்பின.

### கோயிற் புனரமைப்பு

டச்சுக்காரர் ஆட்சியின் பின்னர் நயினுதீவில் மீண்டும் நாகேஸ்வரி ஆலயம் சிறிய அளவிற் கட்டப்பெற்றது. எனினும் அங்கே தாபிக்கப்பெற்றிருந்த சிவலிங் கத்தைச் சைவர்கள் தாம் மறைந்து வைத்திருந்த இடத்திற் காணுமையாற் பெரிதும் கவலைகொண்டார் கள். எனினும் நயினுதீவுக்கு வடபால் உள்ள புலியேத்தி அல்லது புளியந்தீவு எனும் சிறுதீவில் பழைய சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்ற சைவர்கள் ஒருவாறு மனந்தேறினுர்கள். இக் கோவில் நாகதம்பிரான் கோயில் என அழைக்கப் படுகின்றது. புலியேத்தியிலுள்ள நாகதம்பிரான் கோயிலிலே தாபித்திருக்கும் சிவலிங்கம் நயினுதீவு நாகேஸ்வரி ஆலயத்தின் சுற்றுப்பிரகாரத்தில் முன்னரே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கக்கங்களுள் ஒன்ருயிருத்தல் கூடும் என்ற கொள்கையும் உண்டு.

டச்சுக்காரர் ஆட்சிக்குப் பின்னர் நாகேச்சரத்தில் தேவி ஆலயமே முதன்மை பெற்றுள தெனக் கருத இடமுண்டு. அற்றன்று; பண்டுதொட்டு இது தேவி யாலயமாகவே விளங்கிற்று என வாதிப்பாரு முளர்.

அழகிய கோபுரம் ஒன்றும் அமைக்கப்பட்டுளது. நாகேஸ்வரி கோயிலின் வாயிலில் இரண்டு பீரங்கி களும் ஒரு கற்சில்லும் இருப்பதை யாத்திரீகர்கள் அவதானித்திருக்கலாம். இப்பீரங்கிகள் டச்சுக்காரர் காலத்தனவாயிருக்கலாம். இவை இத் தீவின் அயலி லுள்ள கடலிலிருந்து கடற்றெழிலாளரால் கொண்டு வரப்பட்டன. அங்குள்ள கற்சில்லு பழைய தேர்ச் சில்லு எனவும், கப்பல் நங்கூரமெனவும் கூறப் படுகிறது. இது பழைய கோயிலின் துவஜஸ்தம்பமா யிருக்கவும்கூடும்.


அண்மைக் காலம்வரை நாக பாம்புகள் இக்கோயிலுக் கருகில் வந்து செல்வது வழக்கமெனச் சில முதியோர் கூறக் கேட்டிருக்கிறேன். பாம்பு வணக்கம் இந்துக் களுட் பண்டுதொட்டுக் காணப்பட்ட மிகவும் புராதன வழிபாடாகவே தெரிகிறது.

### இப்போதுள்ள கோயிலமைப்பு

நயினுதீவின் கிழக்குத் திசையிற்முன் துறைமுகம் உண்டு. இத் துறைமுகத்திலிருந்து செல்லும் பாதை அம்பாளின் கீழைவீதி வரை சென்று பின்னர்த் தெற்கு நோக்கிச் செல்கின்றது. எனவே நயினுதீவுத் துறை முகத்தில் வந்து இறங்குகின்ற சகலரும் அம்பாளின் விடைபெற்றே ஊருக்குள் உலாவவேண்டும் என்ற முறையிற் கோயில் கிழக்கு நோக்கிய சந்நியுடைய தாய்க் கட்டப்பட்டுள்ளது. யாத்திரிகர் நாவாயில் வரும் பொழுதே தூரத்தில் தூலலிங்கமாகிய கோபுரத்தைத் தெரிசித்து அம்பாளுடைய புனித தலத்திற் கால் வைக்கின்றனர். கோயிலும் அதனைச் சார்ந்த நிலமும் 150 லாச்சம் விஸ்தீரண முள்ளது. கோயிலும் வீதியும் 15 பரப்பு வரை இருக்கும். மூர்த்தி தலம் தீர்த்தம் எனு மும்மையானும் சிறந்து விளங்குவது இந்த நா கேஸ்வரி ஆலயமாகும்; கோயிலுக்குத் தென்புறத்திலும் வடபுறத்திலும் தீர்த்தம் உண்டு.

மஹிஷாசுர மர்த்தநி





தட்சிணாமூர்த்தி

**இராமலிங்கர் இராமச்சந்திரர்**

யாழ்ப்பாணக் கச்சேரியில் சைவசமயக் கோயில் களைப் பதிவு செய்து வைத்திருக்கும் பழைய இடாப்பு ஒன்று உண்டு. இது 1882 ஆம் ஆண்டளவில் தயாரிக் கப்பட்டது. அதில் இந்த நாகபூஷணி அம்பாள் ஆல யத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் விவரம் பின்வரு மாறு :

**நாகபூஷணி அம்மன் கோவில்**

இராமலிங்கர் இராமச்சந்திரர் 1788 இல் கட்டியது. **மனேச்சர் :** இராமலிங்கர் கார்த்திகேசரும் பிறரும், கல்லுக்கட்டடம்.

**திருவிழா :** ஆண்டுக்கொருமுறை ஆனி 10 ஆந் தேதி தொடக்கம் 20 ஆந் தேதி வரை 10 நாட்கள் திருவிழா.

கோயில் வீதியில் மக்கள் அம்பாளைக் காவிக்கொண்டு வலம் வருதல் அல்லது தேரில் வலம் வருதல்.

திருவிழாக் காலங்களில் 10,000 பேர்வரை வருகின் றனர். யாழ்ப்பாணத்திலும் அயலிலுள்ள தீவுகளிலு மிருந்து யாத்திரிகர் வருகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட இராமச்சந்திரரின் ஆண் சந் ததியினரே இக் கோயில் மனேச்சராக இருந்துவருகின் றனர் எனச் சொல்லப்படுகின்றது.

காலத்துக்குக்காலம் இக் கோயிலில் அநேக திருப் பணிகள் நடைபெற்று வந்துள்ளன. திருக்கோயிலின் கீர்த்திக்கியைய வானுற ஓங்கிநிற்கும் கோபுரமொன்று கிழக்கு வாயிலில் அமைக்கப் பெற்றுள்ளது. இத் திருப்பணியில் வட்டுக்கோட்டையைச் சார்ந்த **இரகுப் பிள்ளை மணியம் அவர்கள்** அதிக அக்கறை எடுத்து வந்தார்கள். பின்னர் வேலணைச் **சோமசுந்தரமணியம்** அவர்களும் இத் திருப்பணியில் ஈடுபட்டுழைத்தனர். இந்தக் கோபுரம் 1935 ஆம் ஆண்டளவிற் கட்டப் பெற்றது. இந்தக் கோயில் ஏனைய சாதாரண கோயில் களைப் போலவே கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியவற்றைக் கொண்டுள்ளது. கோ யிலின் தென்புற உள்வீதியில் தேவஸ்தான அலுவலகம் உண்டு. மேற்கு வீதியில் பிள்ளையார் கோயில், வாகன சாலை, சுப்பிரமணியர் கோயில் என்பவை உண்டு. கிழக்கு வீதியில் நவக்கிரகங்கள், வைரவர் கோயில் முத லியன உண்டு. தேரோடும் வெளி வீதியில் வேப்ப மரங் கள் காணப்படுகின்றன. யாத்திரிகர் தங்குவதற்கு வச தியான கிழக்கு மடம், மேற்கு மடம், தெற்கு மடம், தென்மேற்கு (சோமபதி) மடம், வடமேற்கு (நகரத் தார்) மடம், வடக்கு (இளந்தலையசிங்க முதலியார், வட்டுக்கோட்டை) மடம், குணரத்தின மடம் ஆதியன உண்டு.

**விமானப் புனரமைப்பு**

நாகபூஷணி அம்பாள் கோயிலின் விமானப் புனர மைப்பு வேலையை, ஸ்தபதிகள் பரம்பரையில் உதித்த வரும் சிற்பத் தொழிலில் புகழ் பெற்றுவருமாகிய காரைக்குடி திரு. **எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார்** 1951 ஆம் ஆண்டு தை மாதம் மேற் கொண்டார். பாண்

டிய நாட்டுச் சிற்ப முறையில் இரண்டு நிலை விமானம் அமைக்கப்பட்டது. அம்பாள் கோயிலின் விமான வேலையை முடித்தபின்னர், பரிவார மூர்த்திகளின் பண்டிகைகளும் திருத்தியமைக்கப்பட்டன. 26.4.51 இல் ஸ்ரீ நாகபூஷணம்பிகை புநராவர்த்த சம்புரோக்ஷண மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்பொழுது வெளிவந்த விஞ்ஞாபனப் பத்திரிகையில் இந்தத் தலத்தின் பெருமை இரத்தினச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு :


ஸ்ரீ விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடை நாடிக்கு ஸ்தானமென்று சாந்தோக்கியம் முதலிய உபநிஷத்துக்களிலே எடுத்தோதப்பெற்றதும், இவ்விலங்கா தீபத்தின் கண்ணே அனேகம் சிவஸ்தலங்களோடு கூடியதும், வடமேற்றிசையில் ஆழிய சாகரம் மத்தியில் தோன்றி சப்தத்வீபங்களுட் சிறப் புற்று வளங்கும் நயினர்தீவில் இற்றைக்குப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் சர்வலோக ரக்ஷியாகிய உமையம்மையாருக்குப் பிரபல வாசஸ்தானங்களா யமையப்பெற்ற அறுபத்துநான்கு பீடங்களுள் ஒன்றாயதும், நாகர்களினால் பூஜிக்கப்பெற்றதும், அருச்சுனன் முதலிய அரசர்களால் தரிசிக்கப்பெற்றதும், சிவானுபூதிச் செல்வர்களாலும் பிறராலும் சிவபூமி சுவர்ணபூமி புண்ணிய பூமி அனுக்கிரகஸ்தலம் என்று வியந்து கூறப்பெற்றதும், இவ்விலங்கா தேவியின் பராசக்திக்கு முக்கிய ஸ்தானமாகவுள்ளதும். சர்வான்மாக்களுக்கும் மனோ பீஷ்டப்படி அனுக்கிரகிக்கும் சர்வரோக நிவாரணியும், ஆன்மாக்களது தியானநிதிகளுக்குத் தாம் அகப்படுதல் வேண்டு மென்னுந் திருவருளினலே சக்திகாரியமாகிய உருவத் திருமேனிகொண்டு திவ்விய மந்திர சிம்மாசனத்தின்மீது ஸ்ரீ நாகராஜேஸ்வரி எழுந்தருளியிருக்கும் திரு க்ஷேத்திரத்திலே.........

சலாபத்திலுள்ள முன்னேஸ்வரத்தில் வடிவாம்பிகைக்கு ஸ்ரீ சக்கரபூசை நடாத்திவந்த பிரமஸ்ரீ **சோமாஸ்கந்தக்குருக்களின்** சீடராகிய நயினதீவு **பிரமஸ்ரீ சுவாமிநாதக்குருக்கள்** அவர்கள் ஸ்ரீ சக்ர பூசையை நாகேஸ்வரி ஆலயத்திலும் ஆரம்பித்து வைத்தார்கள். குருக்கள் அவர்கள் கோயிற் கிரியைகளைப் பயபக்தியுடனும் முறை பிறழாமலும் செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பவர் உள்ளத்தில் பக்தி தானகவே அரும்பிவிடும். இவரிடம் கற்ற நயினதீவு **பிரமஸ்ரீ கயிலாயநாதக் குருக்கள்** அவர்களும் கோயிற் கிரியைகளை முறையாகச் செய்வதிற் பிரசித்திபெற்று விளங்குகின்றார்கள்.

**தியானஞ் செய்வதற்கேற்ற ஆலயம்**

"அந்தராத்ம யோகத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தியானஞ் செய்வதற்குத் தகுந்த சூழ்நிலையை நயினதீவு அம்பாள் கோயிற் சுற்றுடலிற் காணலாம். நாலா பக்கமும் கடலினற்சூழப்பட்டு அழகிய சிறு தீவாக நயினதீவு விளங்குகிறது. பௌர்ணிமைத் தினத்தன்று நடுநிசியின்போது ராஜகோபுரத்தின் கீழமர்ந்து தியானஞ்

கைலாய வாகனத்தில் அம்பாள் வீற்றிருக்கும் அற்புதக் காட்சி



செய்தால் பயங்கரமான தொரு தெய்வீக சக்தி நம்முள் இறங்குவதை உணரலாம். பயங்கரமாக அச்சக்தி இருப்பதற்கு நம்மிடமுள்ள குறைபாடுகளே காரண மாகும். சுயநல வழிகளில் அகம்பாவத்துடன் செல் லும் நம் மனசானது, சக்திவாய்ந்த தெய்வசாந்நியத் துடன் சம்மதப்படும்பொழுது ஒருவித அதிர்ச்சியை அடைகிறது. இந்த அதிர்ச்சியானது 'நான்' என்ற அகம்பாவத்தை ஈடாகச்செய்வதற்கே ஏற்படுகிறது. 'நான்' என்ற உணர்ச்சியைப் பரித்தியாகஞ் செய்ய நாம் இலேசில் இடங் கொடுப்பதில்லை. ஆனால் 'நான்' என்ற உணர்ச்சி அற்றுப் போகாத விடத்துத் தெய்வ அருள் கிட்டாது" சித்தர்களும் யோகிகளும் இந்தச் சூழ்நிலையைப் பெரிதும் விரும்பிச் செல்கின்றார்கள்',

### ஆலய பூசையும் விழாவும்

உஷத்காலம், காலைசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என ஐந்து கால நித்திய பூசை நடை பெறுகின்றது. கோயிலுக்கென நித்திய மேளம் உண்டு. சிவன், அம்பாள், விநாயகர், சுப்பிரமணியர், விஷ்ணு முதலிய ஐவரின் பூஜைத் தினங்கள் ஒவ்வொரு மாதத் திலும் நடைபெறும். ஆனி மாதத்தில் மகோற்சவம் நடைபெறும். திருவிழா பத்து நாள் நடைபெறும். புரட்டாதியில் நவராத்திரி பூசை சிறப்பாக நடை பெறும். பகலிற் சங்காபிஷேகமும் இரவில் ஸ்ரீ சக்கர பூசையும் நடைபெறுவதுடன் விஜயதசமியன்று அம் பாயுத பூசையும் வன்னிவிருட்ச பூசையும் நடைபெறும்.

இவ் வாலயத்திற் பாரம்பரியமாகச் சந்தான கோபாலப்பிரதிஷ்டை செய்த அளவிறந்த பக்தர்கள் புத்திர சந்தானமுடையவர்களாய் மீண்டும் அம்பாள் தரிசனை செய்து விலைமதித்தற்கரிய திருவாபரணம். வாகனம், தீபம் முதலியவற்றைக் காணிக்கையாகக் கொடுத்திருக்கின்றனர். இந்தக்கோயிலில் அழகிய கைலாச வாகனம், சர்ப்ப வாகனம், காமதேனு வாகனம் முதலியன உண்டு. இவை யாவும் பக்தர்கள் காணிக்கை யாகக் கொடுத்து உதவியனவாகும்.


### ஆலய நிர்வாகம்

யாழ்ப்பாணத்திலுள்ள சைவக் கோயில்களுக்குச் சாதாரணமாக ஏற்படும் நோய் அம்பாள் ஆலயத்தை யும் விட்டுவிடவில்லை. ஆலய நிருவாகம் சம்பந்தமாக வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால் இப்பொழுது நிர் வாகப் பொறுப்பு ஒன்பது அங்கத்தவர்களைக்கொண்ட தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக ஆலய நிர்வாகஞ் சீராகவும் சிறப்பாகவும் நடைபெறுகின்றது.

### அம்பிகையின் அருளொழுகு வடிவம்

நாகேஸ்வரியின் சாற்றற்கரிய சாந்நித்யத்தையும் தேஜோமயத்தையும் அருளொழுகு வதனத்தையும் நீங்கள் உண்மையிற் கண்டு கடைத்தேற விரும்பினால் இரதோற்சவத்துக்கு ஒருமுறை சென்று பாருங்கள். அந்தச் சக்தி வெள்ளத்தில் இறங்கி ஆடிப்பாருங்கள். அம்பிகையின் திருமுன் நின்று அனுதினமும் போற்றுந் தொண்டர்தம் பெருமை யார் சொல்ல வல்லார் என்று வரகவி நயினை நாகமணிப் புலவரே கூறுவாராயின், அம்பிகை தேரின் மீது இவர்ந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குக் காட்சியளிக்கும் அறபுதக் காட்சியை ஒரு முறையாவது காணப்பெறுவீர்களாயின், நீங்கள் எடுத்த பிறவியாற் பயனடைந்துவிட்டீர்கள் என்று சொல்லலாம்.

நாகபந்தம்



"எழுதரு மறையுங் கடந்தநா யகிநன்
    றிருந்தருள் செய்யுமத் தலத்திற்
பழுதறுஞ் சைவ தந்திர முறையாற்
    பத்தியோ டவளடி பரவி
யழுதகண் ணெடுமெய் யரும்பநாத் தழும்ப
    வகங்குழைந் தென்பெலா முருகத்
தொழுதகை யொடுநின் றனுதினம் போற்றுந்
    தொண்டர்தம் பெருமையார் சொல்வார்.


வாய்ந்தசெந் திருவுங் கலைகளுங் காண
    மலங்குமன் பிணையுளங் காண
வோய்ந்தவெம் பிணியாங் கடற்கரை காண
    வுடற்றிடு மறலிபின் காண
வாய்ந்தமந் திரத்தின் பொருளது காண
    வம்பிகை யோங்குசீ றடிகள்
காய்ந்தபுன் கண்க ளாமெனு தணிநேர்
    காணுவார் கண்களே கண்கள்.

ஈர்த்தவே ளருங்கைச் சிலையலர் கூம்ப
    வீன்றிடுங் கருப்பைகள் கூம்பப்
போர்த்ததீ நிரையக் குழிகள்வாய் கூம்பப்
    புறச்சம யாந்தகங் கூம்ப
மூர்த்தமா யிருந்த கவுரியா லயத்து
    முன்புநின் றன்பொடு தலைமேற்
கூர்த்தநீ டிரக்கை இவையனு துயர்த்திக்
    கூப்புவார் கைகளே கைகள்.

—நயினைமான்மியம் மூர்த்திவிசேடச் சுருக்கம்.

ஆனிமாதத்தில் இலங்கையின் பல பாகங்களிலு மிருந்து வடபகுதிக்கு யாத்திரிகர் திரள்திரளாகச் செல்வதைக் கண்டால் அவர்கள் நயினாதீவு நாகம்மாள் ஆலயத்துக்கே செல்கின்றனர் எனத் திடமாய்க் கூறி விடலாம். பூசைகளுக்கும் நேர்கடன்களுக்குமாக நாளாந்தம் மக்கள் இக் கோவிலுக்குச் சென்று கொண்டிருக்கின்றன ரெனினும், ஆனி மாதத்திற் பத்து நாட்களுக்கு அம்பாள் பவனி வந்து பக்தர்களை ஆசீர் வதிக்கும் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும் காலத்தில் மக்கள் பெருந்தொகையாகச் செல்கின்றார் கள். அம்பாள்மீது கொண்ட ஆராத பக்தியினால் மக்கள் பிரயாணக் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது 'மோட்டார் லாஞ்சி' களிலும். பாயவிரித்தோடும் தோணிகளிலும். வத்தைகளிலும், வள்ளங்களிலும் இங்கு வந்து குவிகின்றனர். இந் நாட்களில் துறை முகத்தில் நூற்றுக்கணக்கான தோணிகளும் மோட்டார் படகுகளும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களும் போய்வந்துகொண்டும், ஏறி இறங்கிக்கொண்டும் இருப்பதைப் பார்க்கப் பார்க்க, புராணங்களிற் கூறப் பட்ட சத்த தீவுகளில் ஒன்று இதுதானோ என்ற ஐயம் ஏற்படும். பூவுலகைக் கடந்து தெய்வலோகத்திற் சஞ்சரிப்பதைப் போன்ற பக்திபரவசம் ஏற்படும். இத் தீவுக்கு முதன் முதலாகச் செல்லும் ஒருவர் வட இலங்கையிற் பெரிய துறைமுகம் நயினாதீவுதான் என்று முடிவுகட்டிவிடக் கூடும். இவ்வாறு அநேக நாவாய்கள் தங்கிநிற்பதை உற்று நோக்குமிடத்து நாகேஸ்வரி

காசிவிசாலாட்சி அம்பாள் அன்னபூரணி திருக்கோலம். இருபுறத்திலும் கோணங்கி சோணங்கி முனிவர் கூத்தாடுங் காட்சி.



கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தலத்தின் பண்டைப் புகழை ஒருவாறு எங்கள் அகக்கண்முன் கொண்டுவருதற்கு ஏற்படுத்திய ஜாலவித்தையென்றுஞ் சொல்லலாம். வர்த்தகக் கப்பல்கள் இடையிலே தங்கிச் செல்லும் பெரிய துறைமுகம் ஒன்று பண்டைக் காலத்தில் இங்கிருந்ததென்பது ஈண்டு நினைவு கூர்தற்பாற்று.

திருவிழாத் தொடங்கிவிட்டால், அதற்கு வரும் பக்தர்களை நயினாதீவு மக்கள் அன்புடன் வரவேற்றுத் தங்கள் வீடுகளிலுங் குடிசைகளிலுந் தங்குதற்கு இடம் கொடுத்து ஆதரவளிக்கின்றனர். சனநெருக்கம் அதிகமாயிருப்பதாற் பக்தர்கள் கோயில்வீதிகளில் பரந்த வேப்பமர நிழலிலும் தோட்ட வெளிகளிலும் கூடியிருந்து அம்பாளின் அருட்கோலத்தைத் தரிசிக்க ஆயத்தஞ் செய்வார்கள்.

பக்தர்கள் அதிகாலையில் துயில்விட்டெழுந்து காலைக் கடன் முடித்தபின், தாமரைக்குளம்போன்ற நன்னீர்க் குளங்களுக்குச் சென்று நீராடுவது கண்ணுக்கு இன்பமளிப்பதாகும். ஒவ்வொரு வீட்டிலுமுள்ள கிணறுகளைச் சுற்றியும் பக்தர்கள் கூடி நிற்பதைக் காணலாம்.

அதிகாலை ஆறு மணிக்கு முன்னரே அம்பாள் தரிசனத்துக்காக மக்கள் கோவிலை யடைகின்றார்கள். எங்கே பார்த்தாலும் தொழுவாரும் அழுவாரும் புரளுவாருமாகவே காணப்படுவர். தம்மை மறந்து, தம் மனைவி மக்களை மறந்து, அகிலாண்ட ஈஸ்வரியின் அடிக் கமல பாதங்களையே சிந்தித்து நின்று உரோமஞ் சிலிர்ப்ப உரைதடுமாறி, 'தாயே! தாயே! ஏரோகரா! நாகம்மாளுக்கு அரோகரா!' என்று கற்றாவின் மனம் போலக் கசிந்து கண்ணீர்மல்கிக் கதறும் மக்களின் ஒலி பாம்பன் கடலொலியையும் மலையடிவார அலையொலியையுங் கடை ஒலியையும் மீறிவிடும்.

புயற்காற்றடித்து ஏழாற்றுப் பிரிவு குமுறிக் கொண்டிருக்குங் காலத்திற் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் யாத்திரை செய்வதில் ஈடுபட்ட போதிலும் அம்பாள் கடைக்கண் பார்வை செய்தருளுவதால், அந்த யாத்திரிகர்கட்கு எவ்வித தொல்லையும் ஏற்படுவதில்லை. நயினாதீவிலுள்ள தொண்டர் சபைகளும் முன்னேற்றச் சங்கங்களும் பொலிசாரும் ஒருங்கு சேர்ந்து எடுக்கும் நடவடிக்கைகள் மக்கள் கூட்டத்தில் நடைபெறக்கூடிய சாதாரண குழப்பங்களைக் குறைக்கின்றன.


**அம்பாள் அலங்காரத் தேரில் வீற்றிருக்கும் அற்புதக் காட்சி**

பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப்பரிவுள்ள உலக நாயகியாகிய நாகேஸ்வரி கருணைத் திருக்கோலத்துடன்

**அம்மனை ஆலமரப் பொந்தில் ஒளித்து வைக்கும் காட்சி**



**அலங்காரக்கட்டை**



வானளாவிய அலங்காரத் தேரின்மீது வந்து பக்தர்களுக் கருள் புரியுங் காட்சியைக் காணில் கருங்கல் மனமுங் கசிந்துருகும். திருவிழாவில் பத்தாம் நாளாகிய தேர்த் திருவிழாவன்று அம்பிகையின் அருள்வடிவக் காட்சி ஓர் அற்புதக் காட்சி, ஆனந்தக் காட்சி! சொற் பிரபஞ்சத்துக்குள் அடங்காத காட்சி! நினைந்து நினைந்து நெக்குநெக்குருகவேண்டிய காட்சி; சொல்லொணுக் காட்சியை, தாமாகவே யுணர்ந்து இன்புற்றிருக்க வேண்டிய காட்சியை நாயேன் சொல்லத் துணிந்த பெருங் குற்றத்தை அம்பாள் பொறுத்து இரட்சிக்குமாறு கும்பிடுகின்றேன்.

அம்பாளின் அற்புத வடிவத்தைச் சொல்லோவியத்தில் தீட்ட முயன்றனர் புலவர் பலர். அவள் பக்திவலையிற் படுபவள் ஆதலின் பக்தி நிரம்பிய அடியாருக்கு எளியள் அல்லவா? ஆகவே அவளை ஒருவாறு வர்ணிக்க முயன்ற **வரகவி முத்துக்குமாருப் புலவர்.**

"பேர்தங்கு மகிலாண் டடுக்குமதி லூறுபொருட்
பிரிவுஞ் சராசரமெனும்
பேருயிர்க ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
பெருமையாம் பாடவெளிதோ
என்று கைவிட்டுவிட்டார். எனினும் அவர்
வரைய முயன்ற சொல்லோவியம் இது:
சோடுற்ற நவரத்தின கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகிலளாவிச்
சொருகிட்ட கொண்டையுஞ் சுட்டியு மலர்க்கையாற்
றெட்டிட்ட சிந்தூரமும்
தோடுற்ற கொந்தளக மரகதக் கொம்புமார்
துணைவிழியி லெழுதுமையும்
துகளற்ற வெண்டாள முருகுநற் பவளவாய்த்
துவருமொளிர் நளினமுகமுந்
தேடுற்ற செங்கமல பொற்பதமு மழகான
திருமெய்யு மறிவினுலே
தெரிசிக்க வருள்தந்து நீடாயு ளும்பெருஞ்
செல்வமுந் தரவேண்டு(ம்) நீ
நாடுற்ற பலவளமு முறையுமிகு நயினு
நகர்க்கண்மரு வுங்கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசுக
நாகபூஸ் வரிஅம்மையே

நயினுதீவுத் தேர்த்திருவிழாவின்போது அம்பிகையை வணங்குவது பெறற்கரிய பெரும் பேருகவே சைவ நன்மக்கள் கருதிவருகின்றுர்கள்.

சர்வலோக நாயகியாகிய நாகேஸ்வரி அம்பாள் அலங்காரத் தேர்மீதிவர்ந்து வீதிவலம்வந்து இருப்புத் தானத்துக்கு வரும்வரை பக்த கோடிகள் நற்றவமிக்க நயினையம்பதியை விட்டகலமாட்டார்கள். அதுவரை யாத்திரிகர் விரும்பினுலுங்கூட நயினுதீவை விட்டுப்



**ஆறதனில் மணல் குவித்து அரியபூசை செய்து அழகான காஞ்சியிற் புகழாக வாழ்ந்திடும் அம்மை காமாட்சியின் திருக்கோளம்.**

புறப்பட முடியாது. வத்தைக்காரர் புறப்படவே மறுத்து விடுவர். வீதிவலம் வரும் அம்பாள் மீண்டும் இருப்பிடத்துக்கு வந்ததும், மக்கள் அர்ச்சனை முதலியவற்றைச் செய்வித்துத் தம் இறுதி வழிபாட்டையும் ஆற்றி அன்னையிடம் விடைபெற்றுக்கொண்டு பாலத்தை நோக்கிச் செல்வார்கள். அங்கே படகுகளிலும், லாஞ்சிகளிலும், போட்டுகளிலும், வள்ளங்களிலும் மக்கள் ஒருவரையொருவர் முந்திக்கொண்டு ஏறும்வரையும், 'அரோகரா அரோகரா' என்று சொல்லும் நாவும் அவ்வாறு அடிக்கடி சொல்லிச் சொல்லிப் பயின்ற வாசனை காரணமாகப் பண்பட்ட உள்ளமும் படைத்த மக்கள் அரோகராச் சொல்லிப் பாயிழுத்து நாவாய்களிற் செல்வதால் சனத்தொகை சிறிது சிறிதாகக் குறைவடைவதையும் கடைசிவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால், சுவர்க்கலோகத்துக்குப் போய்

மீண்டுவந்திருப்பதாகவே தோன்றும். நம் வாழ்வென்பது ஓர் சந்தையிற் கூட்டம் என்பதும் மனத்திற் பதியாமற் போகாது.

இரதோற்சவத்தின் பின்னர் அன்று சாயந்தரம் தீர்த்தோற்சவம் நடைபெறும். இது துறைமுகத் தண்மையில் நடைபெறும். அடுத்த நாள் இரவு தெப்போற்சவம் நடைபெறும். இரு வத்தைகளை ஒன்ருகப் பிணைத்து அதன்மேல் அழகிய மேடையமைத்து அதன்மேல் அம்பிகையை வாகனத்தில் இவர்ந்த வண்ணம் எழுந்தருளச் செய்து மின் விளக்குகளால் இரவைப் பகலாக்கி நடைபெறும் இத் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாகும்.

### பக்தர் பலரின் கைங்கரியம்

நாகேஸ்வரி ஆலயத்தில் சிறந்த கோபுரமும் இருநிலை விமானமும் கட்டப்பெற்றுள்ளன. ஆனுல் அம்பாள் நெடுங்காலமாகப் பழையதொரு தேரிலேயே திருவிழாவின்போது பக்தர்களுக்குக் காட்சியளித்து வந்தாள். அந்தத் தேர் இழுபடும்பொழுதே ஈடாடத் தொடங்கியதைக் கண்டு பக்தர் பலர் கவன்றனர். இந்தக் கவலை தேர்த்திருவிழாவுக்குச் சென்றிருந்த பலரிடம் தோன்றியது. திருவருள் கூட்டிவைக்க, பக்தர் பலர் ஒன்றுகூடி அம்பாளுக்குப் புதியதொரு தேர் அமைத்து இழுக்கும் வரை உறங்க மாட்டோம் எனக் கங்கணம் கட்டினர். வடமாகாண அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா அவர்களைத் தலைவராகக்கொண்டு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேர்த் திருப்பணிச்சபை ஒன்று அமைக்கப்படலாயிற்று. இச்சபைக்கு ஊர்காவற்றுறைக் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம், திரு. ஆ. கந்தையா ஆகியோர் தனுதிகாரிகளாகவும், திரு. வே. சுந்தரம்பிள்ளை, திரு. வே. செல்வநாயகம், திரு. கா. ஆறுமுகம் ஆகியோர் செயலாளராகவும் கடமையாற்றினர். இத்திருப்பணியில் ஆரம்பத்திலிருந்து அருந்தொண்டாற்றிய விவேகானந்த அச்சக அதிபர் திரு. வே. சுந்தரம்பிள்ளை அவர்கள் 27.3.1957 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். திருப்பெருந் திருகுன்றக்குடி அடிகளாரின் ஆலோசனையின் பேரில் நாகர் கோயில் திரு. எஸ். குமாரசுவாமி ஆசாரியார் அவர்கள் நயினுதீவு நாகேஸ்வரியின் திருத்தேர்ப் பணியைக் கையேற்ருர்கள். திரு. குமாரசுவாமி ஆசாரியார் தேர்ச்சி பெற்ற நுண்டொழில் வல்லுநர் சிலரையும் தம்முடன் கூட்டி வந்து தேர்த்திருப்பணிச் சபைக் காரியதரிசியாகவிருந்த திரு. வே. சுந்தரம்பிள்ளையவர்களுடைய வளவில் தேர்த்திருப்பணியை ஆரம்பித்தார்கள். முதன்முதலில் அவர்கள் மூஷிக வாகன விக்கினேஸ்வரருடைய திருவுருவத்தைப் புடைப்புச்சிற்பமாகச் செதுக்கினுர்கள். பின்னர் இவ்வாண்டில் நாகபூஷணி அம்பாளைப் புதிய தேரில் உலாவரச் செய்யவேண்டுமென்ற ஆவலுடன் அல்லும்பகலும் உழைத்து வந்தார்கள். அவர்களுடைய பணி அம்பாள் அருளினுல் முட்டின்றி நிறைவேறிவிட்டது. இரதோற்சவம் சிருட்டி முதலிய பஞ்ச கிருத்தியங்களுள் சங்காரத்தைக் குறிக்குமென ஆகமங்கள் கூறுகின்றன.

**பல்வகைத் தேர் :**

தேர்கள் பலவகைப்பட்டனவாயினும் அவற்றின் உருவ அமைப்பில் அதிக உருவ வேற்றுமை காணப்படவில்லை.

"தேர்கள் : மரத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர் முதலியவை உண்டு. தேர்களில் மிகச் சிறந்த சிற்பவேலை செய்து பதிக்கப்பெறும். உருளை நான்கு முதல் பத்து உருளைவரை இருப்பது உண்டு. திருவாரூர்த் தேர் மிகப் புகழ்பெற்றது. ஸ்ரீ வில்லிபுத்தூர்த் தேர் மிகப் பெரியதென்பர். தேர் ஓட்டுதல் ஒரு சிறந்த கலை. எல்லாராலும் முடியாது. புறப்பட்டபிறகு நிலைக்குச் சேர்ப்பித்தல் மிகக் கடினம். ஆயிரக் கணக்கான மக்கள் அதனை இழுக்கவேண்டும். தெப்பத்தேர், நீர்மேல் மிதக்குந் தேர். இது இக் காலத்தில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வெகு சிறப்பாகச் செய்யப்படுகிறது. வெள்ளித் தேர்கள் திருவண்ணுமலை, பழனி முதலிய இடங்களில் உண்டு. வாகனம், தேர் இவைகளைச் செய்யுந் தொழிலும் ஒரு சிறந்த தொழிலாகும்" என்று கூறுகிருர்கள் இராவ்பாதூர் சி. எம். இராமச்சந்திரச் செட்டியார் அவர்கள்.

தேர்களைப் பெரும்பாலும் தாமரை மொட்டுவடிவிலேயே அமைத்தனர் என ஊகிக்க இடமுண்டு. மேலும் கொடுஞ்சி என்ற ஓர் உறுப்பும் தேர்களிலே அமைக்கப்பெற்றிருந்தமை நோக்கற்பாலது.

**சித்திரத்தேரின் வெள்ளோட்டமும் மலர் வெளியீடும்**

நவமாயமைக்கப்பெற்ற சித்திரத்தேரின் வெள்ளோட்ட வைபவம் 8-7-57 ல் நயினுதீவில் நடைபெறும் எனத் தேர்த்திருப்பணிச்சபை அறிவித்தது. அங்கே யாத்திரை செய்வதற்கேற்ற போக்குவரவு வசதிகளையும் உணவு வசதிகளையும் திருப்பணிச்சபை செய்துவைத்தது. பெருந்தொகைப் பணச் செலவிற் புதியதொரு சித்திரத் தேர்த் திருப்பணியை நிறைவேற்றிய தேர்த் திருப்பணிச் சபையினர் தேரின் வெள்ளோட்ட வைபவத்தின்போது சிறந்த மலர் ஒன்றினை வெளியிடக் கருதி அதனை எழுதித் தருமாறு என்னைக் கேட்டுக்கொண்டனர். இருவாரங்கட்கிடையே எழுதித் தரவேண்டுமென்றனர். இதனைக் குறித்த தினத்தில் வெளியிடுவதில் திரு. வே. கிருஷ்ணபிள்ளையும் திரு. வே. கந்தசாமியும், திரு. வே. செல்வநாயகமும் பெருமுயற்சி செய்தனர். ஒருமாத காலத்துள் இதன் இரண்டாம் பதிப்பு வெளிவரலாயிற்று. திருவாரூர்த்

தேரழகும் திருவிடைமருதூர் வீதியழகும் என்ற முதுமொழியொன்றுண்டு. **ஆனல் சென்ற ஆடி மாதம் தொடக்கம் திரு நயினைத் தேரழகும் திருவிடைமருதூர் வீதி யழகும்** என்ற மொழியே பலர் வாயினும் வழங்குகின்றது. ஈழநாட்டிலே இத்தகைய சிறப்புவாய்ந்த சித்திரத்தேர் இதுவரை அமைக்கப் படவில்லையென்றுதான் கூற வேண்டும்.

**ஈழநாட்டில்**

"நம்முடைய ஈழநாட்டிலும் பழைய தேர்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட சித்திரங்கள் நிறைந்த மரத் தேர்கள் பல காணப்படுகின்றன. மாவிட்டபுரம், பருளாய், சுதுமலை முதலிய இடங்களிலுள்ள தேர்களின் சித்திரங்கள் ஒத்த அழகும் அமைப்பும் பொருந்தியனவாய் விளங்குகின்றன." மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயிலில் உள்ள தேரும், பருளாயிலுள்ள தேரும் ஒரே காலத்தன என்றும் அவை சண்முகசேகர முதலியார் என்ற பிரதானி ஒருவராற் செய்யப்பட்டனவென்றும் என் நண்பர் ஒருவர் குறிப்பிட்டார். நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மருதடி விநாயகர்கோயில் முதலிய ஆலயங்களிலுஞ் சித்திர வேலைப்பாடமைந்த தேர்கள் உண்டு.

இத்தகைய கீர்த்திவாய்ந்த தேர் வரிசையில் நயினுதீவு நாகபூஷணி அம்மன் கோயில் தேர் முக்கிய இடம் வகிக்கும் என்பதற் கையமில்லை. இந்த அழகிய தேரைப் பார்க்கவே பலர் நயினுதீவுக்கு யாத்திரை செய்வர் என்று அவுஸ்திரேலிய மரவேலை நிபுணர் திரு. ஹேப்ட் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தேர்வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது கண்டு மகிழ்ந்த இவ்வறிஞர் இத் தொழிலாளரை மனமாரப் புகழ்ந்துள்ளார். அவர் அளித்த நற்சாட்சிப் பத்திரம் இது :

தமிழாக்கம்

| | |
|---|---|
| ஓ. டி. ஹேப்ட்<br>(கொழும்புத் திட்ட நிபுணர்)<br>கிராமாபிவிருத்தி, குடிசைக் கைத்தொழிற் பகுதி<br>கொழும்பு—7. | 109 ஆம் நம்பர் அறை,<br>கோல்பேஸ் ஹோட்டல். |

நயினுதீவு நாகபூஷணி அம்பாள் தேர் நிர்மாண வேலைத் தலத்திற்கு விஜயஞ் செய்தபோது, அங்கு வேலை செய்யும் கலைஞர்களின் திறமையையும், மிக நுட்பமான பாகங்களை எல்லாம் மிகவும் இலகுவில் அவர்கள் தயாரிக்கும் விதத்தையுங் கண்டு மிகவும் வியந்தேன். அவர்களின் வேலையைப் பார்த்துக்கொண்டிருப்பதே ஒரு படிப்பாகும். பூர்த்தியான தேரைப்பார்க்க முடியுமானல் நான் மிகவும் ஆனந்தமடைவேன்.

நான் பல தேசங்களைச் சுற்றி வந்திருக்கிறேன். ஆனல் இதுபோன்ற கலையில், நான் இங்கு கண்டதுடன் ஒப்பிடத்தக்க பெருந்திறனை வேறெங்கும் கண்டதில்லை. யாத்திரீக வசதி நிலையம் இவ் வேலைக்கு மிகவும் அதிக விளம்பரத்தை நல்க வேண்டும் என்றும் அதன்மூலம் வெளிநாட்டிலிருந்து வருவோர்கள் நுட்ப மிகுந்த இத் தேர் வேலையைப் பார்க்கச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்றும் ஆலோசனை கூற விரும்புகின்றேன்.

ஓ. டி. ஹேப்ட்,
ஆஸ்திரேலிய நிபுணர்,
(கிராமாபிவிருத்தியும், குடிசைக் கைத்தொழிலும்)

**தேரின் உறுப்புக்கள்**

தேரின் உறுப்புக்களாகிய பூதப்பார், கன்னிலப்பார், முதலாவது நிலம், கபோதப்பார், ஆனைத்தொட்டிப் பார், அச்சப்பார், அச்சப்பூத்தலைப்பார், பூத்தலைப்பார், இரண்டாவது நிலம், சிம்மப்பூத்தலைப்பார், மூன்ருவது நிலம், நாகத்தலைப்பார், விஸ்தாரப்பார், தேவாசனம்,

அர்ச்சுனன்—நாக கன்னிகை திருமணம்



சிம்மாசனம், கம்பங்கள், பண்டிகை, கர்ணக்குடம், மணிமுடி முதலியன சிற்ப சாத்திர முறைப்படி செவ்வனே அமைக்கப் பெற்றுள்ளன. நயினுதீவுக் கோயில்களைப்பற்றிய ஐதிகங்கள், சரித்திரத் தொடர்புள்ள சம்பவங்கள், கிருஷ்ண லீலைகள், அட்டமங்களம், அட்டதிக்குப் பாலக சக்திகள், அட்டலக்குமிகள் அம்பாளின் உருவ பேதங்களாகிய உருத்திர சக்திகள் பதினொன்றும் அவர்களுக்குரிய வாகனம், ஆயுதம் முதலியவற்றுடன் சிற்ப முறைக்கமையத் திறம்படப் பொறிக்கப்பெற்றுள்ளன. நாகம் ஒன்று புளியந்தீவில் இருந்து பூப்பறித்துக்கொண்டு வரும்வழியில் கருடனல் தாக்கப்பட்ட வரலாறு மிக அற்புதமாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது.

**சக்திக்குரிய தேர் : வழிகாட்டி**

அல்லியரசாணி ஆட்சி செய்தபொழுது அவளுக்கு மந்திரி, பிரதானி, பணியாளர் எல்லாரும் பெண்களாகவே இருந்தார்களாம். ஆண்கள் அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவும் முடியாதாம். அதுபோலவே உலக மாதாவாகிய நாகேஸ்வரி எழுந்தருளி வீதிவலம் வருதற்குரிய சித்திரத் தேரிலும் சக்திகளுக்கே முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே சுவாமி எழுந்தருளும் தேருக்கும் தேவி எழுந்தருளும் தேருக்குமுள்ள பிரதான வேற்றுமை இதுவேயாகும் என்பதை மனத்திற் பதித்துக்கொள்ளல் வேண்டும்.

இந்தத் தேரில் நான்கு அழகிய குதிரைகள் இருக்கின்றன அல்லவா? நான்கு வேதங்களாகிய குதிரைகளை ஓட்டுபவள் பிரமாணி (பிரமாவின் மனைவி) எனும் சக்தியாவள். இந்தக் குதிரைகள் இருக்கிற பக்கம் கிழக்குமுகமாக அல்லது தேரின் கிழக்குப்பக்கமாகக் கருதப்படும். எனவே குதிரைகள் உள்ள பக்கத்தைக் கிழக்குப் பக்கமாகக் கருதினல், முதலில் அந்தப் பக்கத்தைத்தானே பார்க்கவேண்டும். நீங்கள் தேரிலுள்ள சித்திரங்களையெல்லாம் விக்கினமின்றிப் பார்த்து முடிக்க விநாயகர் துணையை நாடத்தானே வேண்டும். எனவே ஆகக் கீழேயுள்ள வரிசையில் கிழக்குப் பக்கத்தில் மூஷிகவாகன விக்கினேஸ்வரர் எங்கே யிருக்கின்றார் என்று தேடிக் கண்டுபிடியுங்கள். அவருக்கு முன்னுற் கும்பிட்டுக்கொண்டு அலங்காரச் சித்திரங்களைப் பார்க்கத் தொடங்குங்கள்.

**சித்திரங்கள் பார்ப்போம் வாரீர்**

**முதலாவது அடித்தள வரிசை**

கிழக்கு :

(1) மூஷிகவாகன விக்கினேஸ்வரர்
(2) கம்பாநதி
(3) பாலசுப்பிரமணியர்
(4) நாககன்னிகை இருவருடன் நாகபூஷணி அம்மன்
(5) துவாரசக்தி
(6) கனிஷ்டா
(7) வல்லிசுந்தரி


இவைதவிர விக்கினேஸ்வரருக்கு முன்

(அ) வேறு ஆயுதந் தாங்கிய நாகபூஷணி அம்மன்
(ஆ) துவாரசக்தி
(இ) இராஜராஜேஸ்வரி
(ஈ) வல்லி சுந்தரி ஆகிய இவர்களின் சித்திர வடிவங்களுமுண்டு.

தெற்கு :

(8) தக்ஷிணுமூர்த்தி
(9) சரஸ்வதி
(10) சிவதுர்க்கை

மதுரை மீனுட்சி அம்மன் திருக் கலியாண வைபவம்



(11) சங்கு பூதம்
(12) தாரை ஊதும் பூதம்
(13) சங்கு பூதம்
(14) பஸ்மாசுர மோகினி
(15) பூத சம்மாரம்
(16) கோபிகா கிருஷ்ண லீலே

மேற்கு :

(17) வல்லி சுந்தரி
(18) சுப்பிரமணியர் (வள்ளி தெய்வானை சகிதம்)
(19) துவாரசக்தி
(20) காளி
(21) பிராம்மிணி
(22) புவனேஸ்வரி
(23) மஹேஸ்வரி
(24) சேஹாஷனி
(25) துவாரசக்தி
(26) நர்த்தன விநாயகர்
(27) வல்லி சுந்தரி

வடக்கு :

(28) துவாரசக்தி
(29) மோஹினி
(30) சாமுண்டி
(31) கத்தி கேடயம் உடைய பூதம்
(32) இரட்டைத்தாரை ஊதும் பூதம்
(33) கத்தி கேடயம் உடைய பூதம்
(34) மனேன்மணி
(35) சரஸ்வதி
(36) துவாரசக்தி

இவைதவிர ஒவ்வொரு மூலைக்கும் 5 உருவங்கள் சேர்ந்த குதிரை நான்கும் இடையிடையே சிம்மக் கட்டைகளும் அமைந்திருக்கின்றன.


**இரண்டாவது வரிசை**

கிழக்கு :

(1) தேவி திருஞான சம்பந்தருக்குப் பால் ஊட்டுதல்
(2) கஜகௌரி
(3) கைலாச வாகினி
(4) சிவபாதகிருதயர், சம்பந்தரைப் பார்த்து, 'உனக்குப் பால் கொடுத்தது யார்?' என்று கேட்கும் காட்சி
(5) இலக்குமி அனுக்கிரகம்

தென்கிழக்கு :

(6) சோணங்கி முனிவர்
(7) அன்னபூரணி
(8) கோணங்கி முனிவர்



நயினாதீவுச் சாமியார் என்றழைக்கப்படும் திருப்பெருந் திரு முத்துக்குமார சுவாமிகள்

தெற்கு :

(9) நயினைப்பட்டருக்கு அம்பாள் ஐந்தலை நாக மாகக் காட்சியளித்தல்
(10) புளியந்தீவில் நாகம் பூக்கொய்தல்
(11) நாகம் வாயில் பூ எடுத்துக்கொண்டு கடல் கடத்தல்
(12) கடலில் கருடன் பாம்பைக் கொத்த எத்தனித்தல்
(13) வணிகன் கருடனை வேண்டிக்கொள்ளல்

இந்தக் கதையின் எஞ்சிய பகுதியை வடக்கு வரிசையில் உள்ள சித்திரங்கள் (26—26) மூலம் பார்க்கலாம்.

தென்மேற்கு :

(14) தும்புரு
(15) நயினைப்பட்டர் மறைந்து நின்று நாகம் செய்வதைப் பார்க்கின்ருர்
(16) நாரதர்

மேற்கு :

(17) தேவி அனுமனுக்கு அனுக்கிரகித்தல்
(18) குண்டோதரன் அன்னம் விழுங்குங் காட்சி

(19) மீனாட்சி திருமணம்
(20) மது, கைடப சம்மார அனுக்கிரகம்
(21) சரவணப் பொய்கையில் தேவி ஆறு குழந்தைகளையும் ஒன்றாக அணைக்கும் காட்சி

வடமேற்கு :

(22) அகஸ்தியர்
(23) அம்பாளை ஆலமரப் பொந்தில் ஒளித்து வைத்தல்
(24) வசிட்டர்

வடக்கு :

(25) திரவியத்தை ஆலயத்திற் சேர்க்குமாறு கருடன் வணிகனுக்குக் கட்டளையிடுதல் (தெற்கு வரிசையிலுள்ள கதையின் தொடர்ச்சி)
(26) வணிகன் திரவியத்தை ஆலயத்திற்குச் செலுத்தல்
(27) போர்த்துக்கீசர் பவளத்தேரைக் கண்ணுறல்
(28) போர்த்துக்கீசர் ஆலயத்தைத் தாக்குதல்
(29) செப்புத்தேர், பவளத்தேர்களைக் கடலிலே தள்ளுதல்

வடகிழக்கு :

(30) வீரமுஷ்டி
(31) அம்பாள் முருகனுக்குச் சக்திவேல் அளித்தல்
(32) கௌதமர்

இவற்றைத்தவிர எட்டு மூலைகளிலும் எட்டு யாளிகள் அமைக்கப் பெற்றுள்ளன.

மூன்றாவது வரிசை

கிழக்கு :

(1) விஸ்வேஸ்வரர்
(2) இந்திராணி
(3) அட்டலக்குமியில் வீரலக்குமி
(4) அட்டமங்கலத்தில் தர்ப்பணம்—கண்ணாடி (1)
(5) பதஞ்சலி முனிவர் வழிபடும் காட்சி
(6) அட்டமங்கலத்தில் பூரணகும்பம்—நிறைகுடம் (2)
(7) அட்டலக்குமியில் தனலக்குமி
(8) அக்கினி தேவி
(9) நவசத்தி உற்பவம்

தென்கிழக்கு :

(10) நாகம், கன்னிகை (அலங்காரச் சித்திரம்)
(11) ஆபுத்திரன் பசுவினிடத்துக் கருணை கொள்ளுதல்—இந்தக் கதை மணிமேகலையில் உள்ளது
(12) ஆபுத்திரன் தவஞ் செய்தல்
(13) ஆபுத்திரன் அட்சயபாத்திரத்துடன் நாகதீபத்துக்கு வருதல்
(14) ஆபுத்திரன் அட்சய பாத்திரத்தைக் கோமுகிப் பொய்கையில் இடுதல்
(15) அட்டநாகபந்தம்
(16) நாகம், கன்னிகை (அலங்காரச் சித்திரம்)

தெற்கு :

(17) நவநாரி குஞ்சரம் : ஒன்பது பெண்கள் ஒன்று சேர்ந்து நிற்குமிடத்து அவர்கள் எல்லாருடைய நிலையையும் ஒருங்கிணைத்துப் பார்த்தால், ஒரு யானை தெரிகிறதல்லவா ?
(18) யமதேவி
(19) தனலக்குமி
(20) அட்டமங்கலத்தில் ரிஷபம் எருது (3)
(21) அனுமனுக்கு மைநாகமலை உதவி புரிதல்
(22) அட்டமங்கலத்தில் யுக்மசாமரம்—இணைக்கவரி (4)
(23) அட்டலக்குமியில் தானியலக்குமி
(24) நைருதிதேவி
(25) அருச்சுனன் நாககன்னிகையைத் திருமணம் புரிதல்

தென்மேற்கு :

(26) அலங்காரச் சித்திரம்
(27) அட்டநாகபந்தம்
(28) காளி தாண்டவத்தில் மகாவிஷ்ணு புல்லாங்குழல் வாசித்தல்
(29) காளிதாண்டவம்
(30) பிரமன் தாளம்போடுதல்
(31) நந்தி மிருதங்கம் வாசித்தல்
(32) அலங்காரச் சித்திரம்

மேற்கு :

(33) திருவானைக்காவில் யானையும் சிலந்தியும் அருள் பெற்ற வரலாற்றுச் சித்திரம்
(34) வருணதேவி
(35) அட்டலக்குமிகளில் ஐசுவரியலக்குமி
(36) அட்டமங்கலத்தில் ஸ்வஸ்திகம் (5)
(37) ஐந்தலைநாகம் நாகரத்தின மளித்தல்
(38) அட்டமங்கலத்தில் ஸ்திரீவற்சம்—தாயும் சேயும் (6)
(39) அட்டலக்குமிகளில் ஆதிலக்குமி
(40) வாயுதேவி
(41) நயினாப்பட்டர் அம்பாளைப் பூசித்தல்

வடமேற்கு :

(42) அலங்காரச் சித்திரம்
(43) சோழ மன்னன் பீலிவளையைக் காந்தருவ விவாகஞ் செய்தல்
(44) பீலிவளை தன்மகன் ஆதொண்டனைச் சோழ தேசம் அனுப்புதல்
(45) புயலில் அகப்பட்டுக் கப்பல் கவிழ்தல்

(46) ஆதொண்டனைச் சோழ மன்னனிடம் ஒப் படைத்தல்
(47) ஆதொண்டனுக்கு மணிமுடி சூட்டுதல்
(48) அலங்காரச் சித்திரம்—(நாகமும் கன்னிகையும்)

வடக்கு:
(49) ஹம்சநாரி
(50) குபேரதேவி
(51) அட்டலக்குமிகளில் கஜலக்குமி
(52) அட்டமங்கலத்தில் தீபம் (7)
(53) மீகாமன் நவரத்தினம் பெறுதல்
(54) அட்டமங்கலத்தில் சங்கம் (8)
(55) அட்டலக்குமியில் சந்தானலக்குமி
(56) ஈசான்ய தேவி
(57) மகிஷாசுரமர்த்தநி

வடகிழக்கு:
(58) அலங்காரச் சித்திரம்—நாகமும் கன்னிகையும்
(59) மீகாமனும் வெடியரசனும் சண்டையிடுதல்
(60) மீகாமன் அம்பாளைப் பூசித்தல்
(61) அப்பர் சுவாமிகள்
(62) சுந்தரமூர்த்தி சுவாமிகள்
(63) மாணிக்கவாசக சுவாமிகள்
(64) அலங்காரச்சித்திரம்

இந்தச் சித்திரக் கட்டைகளுக்கு மேலே தளம் உண்டு. தளத்தில் இடப்பட்ட ஆசனத்திற்றுன் அம்பாள் வீற்றிருந்து பக்தகோடிகளுக்குக் காட்சிகொடுத்துத் திருவருள் பாலிப்பாள்.

## அட்டமங்கள தரிசனம்

தெய்வ சந்நிதானத்தை யாதல் வேறு எவ்விடத்தை யாதல் தரிசிக்கச் செல்வோர் முதலில் அட்டமங்களத்தைத் தரிசனை செய்து கொண்ட பின்னரே தாம் வந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்வது சைவமரபு. எனவே இந்த இரத சந்நிதானத்தை அடையும்போதும் மங்களங்களைத் தரிசிக்க வேண்டும்; எப்பொழுதும் மங்களமாகவே வாழ வேண்டும் என்ற கோட்பாட்டுக்கியைய கண்ணுடி, நிறைகுடம், எருது, இணைக்கவரி ஸ்வஸ்திகம், தாயும் சேயும், தீபம், சங்கு எனப்படும் அட்டமங்களங்கள் பொறிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். புடைப்புச் சிற்பங்களில் நவநாரிகுஞ்சரம் மிக அழகாகப் பொறிக்கப்பெற்றுள்ளது. மானிடப் பிறவியின் ஒன்பது தத்துவங்களையும் அடக்கியாள ஒரு பாகன் வேண்டும் என்பதைச் சிற்பி, பெண்கள் ஒன்பதின்மரின் உருவத்தைக் கொண்டு ஒரு யானை உருவம் சமைத்து அதன் மேல் ஒரு பாகனையும் பொறித்திருப்பது மிக அழகாகவிருக்கின்றது. இதில் சிற்பியின் கைத்திறன் நன்கு பிரதிபலிக்கின்றது. இவ்வாறே அம்சநாரியும் அமைந்திருக்கின்றது; பெண்கள் பலர் சேர்ந்து நடத்தும் லீலா விநோதங்கள் முழுத் தோற்றத்தில் ஓர் அன்னப் பட்சி உருவம்போலக் காட்சியளிக்கும் முறையில் சிற்பி சித்திரித்திருக்கின்றுர். ஆறதனில் மணல் குவித்து அரிய பூசை செய்யும் காஞ்சி காமாட்சியைக் கம்பாநதி கோலத்திலும் காசி விசாலாட்சியை அன்ன பூரணி திருக்கோலத்திலும், மதுரை மீனுட்சியைத் திருக்கல்யாணத் திருக்கோலத்திலும் அமர்த்தியிருக்கின்றனர். விஷ்ணு புல்லாங்குழல் ஊத, பிரமன் தாளம் போட, நந்தி மிருதங்கம் வாசிக்க, நாரதர் தும்புரர் தம்புராக்களுடன் ஆடிப் பாடிக் களிக்க, காளி தேவி தாண்டவமாடும் காட்சி களிபேருபகையளிப்ப தொன்றுகும்.

**துங்கமிகு பக்குவச் சனகன் முதல்**
**முனிவோர்கள் தொழுதருகில் வீற்றிருப்பச்**
**சொல்லரிய நெறியை**
**ஒரு சொல்லாலுணர்த்தியே சொரூபாநு**
**பூதிகாட்டிச் செங்கமலபீடமேற்**
**கல்லாலடிக்குள் வளர்**
**சித்தாந்த முத்தி முதலே**

எனத் தாயுமான அடிகள் போற்றிய தக்ஷிணுமூர்த்தி திருவுருவத்தின் முன் நிற்கும் பொழுது எங்களையறியாமலே ஒரு அமைதி குடி கொள்கிறது.

இத்தகைய அழகிய திருவுருவங்களை ஆக்கக்கூடிய சிற்பிகள் தமிழ் நாட்டில் இன்றும் இருக்கின்றுர்கள் என்பது தமிழர்கட்குப் பெருமையளிக்கக்கூடிய தொன்றுகும். பெண்கள் சாதாரணமாகத் தங்களை அழகு இராணிகளாக மதிப்பது வழக்கம். இந்த மனப்பான்மை இலக்குமிக்கும் இருந்ததாம். அழகிற் சிறந்தவள் தன்னைவிட வேறெருவர் இல்லை யென்ற இறுமாப்பினுல் முனிவர்களின் சாபத்துக்காளாகி மீண்டும் அம்பாளுடைய கடாட்சத்தால் தன் பழைய அழகைப் பெற்ற புராணக் கதையினைப் படியாதவர்களும் இந்தத் தேரிலுள்ள சித்திரத்தின் மூலம் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் சிற்பி அமைத்திருக்கின்றுர்.

கோணங்கி முனிவரும் சோணங்கி முனிவரும் கூத்தாடுவதைப பார்த்தால் யாருக்குத்தான் சிரிப்பு ஏற்படாது. இக்காலத்துக் கோமாளிபோலக் காட்சியளிக்கின்றுர் முனிவர். போர்த்துக்கீசர் கோயிலின் மேலே தொப்பிகளுடன் நின்று கோயிலை இடிப்பதும், கோயில் தாறுமாருக உடைந்து விழுந்தறுவாயிலிருப்பதும் மிக நுணுக்கமாகக் காட்டப்பட்டுள்ள சிற்பத்தைப் பார்க்கும்பொழுது அழுகையும் கோபமும் கலந்து கிளம்புகின்றன. அருச்சுனன் நாக கன்னியைத் திருமணஞ் செய்தல், ஆபுரத்தின் மணி பல்லவத்திலுள்ள கோமுகியில் அட்சயபாத்திரத்தை இடுதல், சோழ மன்னன்

பிலிவளையை மணந்து அவளுடைய மகனுக்கு ஆதொண்டைச் சக்கரவர்த்திப் பட்டம் சூட்டுதல், நயினைப்பட்டர் அம்பாளைப் பூசித்தல், தேவி திருஞான சம்பந்தருக்குப் பால் ஊட்டுதல், அம்பாள் முருக னுக்குச் சக்திவேல் கொடுத்தல், அம்பாளை நயினாதீவு ஆலமரப் பொந்தில் ஒளித்து வைத்தல், மீகாமன் வெடியரசன் சண்டையிடுதல் ஆதியாம் சம்பவங்கள் தேரில் சித்திரிக்கப்பட்டுள்ளன. முறுக்கு மீசையுடனும் ஆயுதங்களுடனும் தோற்றமளிக்கும் வீரமுஷ்டியைப் பார்க்கும்போது எங்களை யறியாமலே வீரம் பிறந்து விடுகின்றது.

### அம்பாள் அருள் பாலிக்கும் திறன்

தென்னிந்தியாவில் மர வேலைக்குப் பேர்பெற்ற இடம் நாஞ்சில் நாடு என்றுதான் சொல்ல வேண்டும். நீலக் கடலோரத்திலே நின்று நித்தம் தவஞ் செய்யும் கன்னி யாகுமரியை அடுத்த நாகர்கோயிலில் பரம்பரையாக மரவேலைத் தொழிலில் ஈடுபட்ட குடும்பங்கள் பல உள. அத்தகைய குடும்பமொன்றில் பிறந்த ஆசாரியார்தாம் நயினாதீவுத் தேர்த் திருப்பணியையும் நிறைவேற்றினார். நாகர் கோவிலைச் சேர்ந்த தாழக்குடியில் பிறந்து இளம் வயதிலே கல்விகற்று சித்திரப் பாடங்களிற் சித்தியெய் தினார். சித்திரமும் கைப்பழக்கமாதலால், குரு சிஷ்ய முறையாக இந்த வேலையைக் கற்றுக் கொண்டார். பின் னர் 1924 ஆண்டிலே சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை யில் திரௌபதையம்மன் கோவிலுக்கு ஒரு தேர் செய் தார். இதுவே இவர் முதன் முதலாகச் செய்து நிறை வேற்றிய தேராகும். பின்னர் இந்தியாவில் பல இடங் களில் கோயிற்றிருப்பணி செய்திருக்கிறார். நாகேஸ்வரி அம்பாளின் திருவருளினால் அவள் உலாப் போதற்குரிய சித்திரத் தேர்த் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும்போதே அவருடைய சஷ்டியாப்த பூர்த்திவைபவமும் அம்பாள் சந்நிதானத்திலேயே நிறைவேறியது. அம்பாள் அருள் பாலிக்கும் திறனை யாரறிவர்.

இத்தகைய மகிமை பொங்கும் தலத்தின்மீது பண் டைக் காலத்தில் புலவர் பலர் தோத்திரப் பாடல்களும் பிரபந்தங்களும் இயற்றியிருத்தல் கூடும். அவை யா வும் பேணுவாரின்றி மறைந்து விட்டன. நாகேஸ்வரி அம்பாள் மீது வண்ணை நகர் திரு. அமரசிங்கப் புலவர் அவர்கள் பாடிய 'நயினை ஊஞ்சல்' 1880ம் ஆண்டு ஆடி மாதம் அச்சிடப்பெற்றுள்ளது. இவருடைய வர லாறு பூரணமாகத் தெரியவில்லை. நயினாதீவுத் தொடர் புடையவரோ என்பதும் தெரியவில்லை. இதன் பிரதி



நயினாதீவு அம்பாளின் சித்திரத் தேரினை உருவாக்கிய ஸ்தபதியார் திரு. எஸ். குமாரசுவாமி ஆசாரி அவர்கள்

யொன்றை எனக்குக் காட்டி அதனைப் பிரதிசெய்ய அனுமதி தந்த யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நூல் நிலைப்பாதுகாப்பாளர் திரு. **கே. செல்லையா** அவர்களுக்கு நான் பெரிதும் கடப் பாடுடையேன். மிகவும் பிற்காலத்திலிருந்தவரும் அராலியிற் பிறந்து அனலைதீவு, நயினாதீவு, காரம்பன் முதலிய இடங்களில் வசித்தவருமாகிய வரகவி **முத்துக்குமாரப் புலவர்** நாகேஸ்வரி மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். பத்துச் செய்யுளும் விலைமதித்தற்கரிய பத்து வலம்புரிச்சங்கு எனக் கூறலாம். பத்து முத்தெனினும் ஒக்கும். இருபதாம் நூற்றாண்டில் வரகவிப் புலவராக விளங்கிய நயினாதீவு நாகமணிப் புலவர் அவர்கள் நயினை நிரோட்டயமக வந்தாதி என்ற சிறந்த பிரபந்தத்தை யியற்றி, "கற்றுழைத் துண்டுக்குப் பித்தளைப் பூணிட்டது போல் ஓர் உரையும் வரையத் துணிந்தது கற்றோர்க்கு நகைப்பையே உண்டாக்கும். ஆனால் அறிஞர்கள் என் வழுவுடை நூலைத்தழுவிடலின்றி உலகமாதாவாகிய ஸ்ரீ பரமேஸ்வரி





சிற்பாசாரிகள் தேரை உருவாக்கும் காட்சிகள்

யின் திருநாமத்தின் பொருட்டு இதிற்றேன்றுங் குற்றங் களைந்து குணந்தழீ இக் கொள்ளுமாறு பணிவோடு வேண்டுகின்றேன்" என்று புதியதொரு முறையில் அவையடக்கம் கூறி அந்நூலினை 1930ம் ஆண்டு வெளியிட்டார். இந்த வரகவி யியற்றிய **நயினைமான்மியம்** எனும் மதிப்பிடற்கரிய தலபுராணம் இன்னும் அச்சுவாகனமேறாது கையெழுத்துப் பிரதியாகவே புலவர் அவர்களுடைய மகன் திரு. பொன்னுத்துரை அவர்களிடம் இருக்கின்றது. புலவர் அவர்களுடைய சகோதரர் தியாகர் என்பவர் மூலமாக 1936ம் ஆண்டளவில் சில பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தேன். அளவிறந்த ஞாபகசக்தியுடைய திரு. தியாகர் அவர்கள் நயினை மான்மியம் முழுவதையும் மனப்பாடம் செய்து வைத்திருந்தார். புலவருடைய தனிப்பாடல்கள் பலவற்றைச் சொல்லிச் சொல்லி மகிழ்வார். புலவர் அவர்கள் செம்மறியாடொன்றுக்குப் பாடிய சரம கவி எவர் மனதையும் ஈர்க்குந் தன்மையது. புலவர் அவர்கள் இயற்றிய நயினைமான்மியத்தின் சிறப்பினை எடுத்துக்கூற இது ஏற்ற சந்தர்ப்பம் அன்று. 'இந்தக் கலைக்களஞ்சியம் இதுவரை வெளிவராதிருப்பது பொதுவாகச் சைவமக்களுக்கும் சிறப்பாக நயினையம்பதியினருக்கும் ஒரு பெருங்குறை யென்றே வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன். இந்நூலின் கையெழுத்துப் பிரதியை என்னிடம் தந்த புலவர் மகன் திரு. பொன்னுத்துரை அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக. அவருக்கு புவனநாயகி நாகேஸ்வரி அம்பாள் பூரண சுகத்தையும் நீடித்த ஆயுளையும் அருளுமாறு அம்மையை வேண்டிக்கொள்கின்றேன். பாரதியடியான் எனப்பாராட்டப் பெற்ற ஆசிரியர் திரு. V. குகசரவணபவன் அவர்கள் 1909ம் ஆண்டிற் பிறந்து தமது 40ம் வயதில் மறைந்து விட்டார். தட்டுத் தடக்கின்றிக் கவிபாடும் சக்தி இயல்பாகவுள்ளவர். திரு. வே. செல்வநாயகம் அவர்கள் நயினை நாகேஸ்வரி அம்மை பதிகமும், திருவிரட்டை மணிமாலையும் என்னும் பாடலை 1948ம் ஆண்டில் பாடியுள்ளார்.

இவ்வாறு நயினாதீவிலுள்ள புலவர்களும், அம்பாள் கடைக்கணேக்கம் பெற்ற பிறதேயப் புலவர்களும் நாகேஸ்வரிமீது பக்திச்சுவை நிறைந்த பாமாலைகளைச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

தேர் இழுப்பதற்கு முன்னர் யாழ்ப்பாணத்து நாதஸ்வர வித்துவான்கள் இன்னிசையளிக்கும் காட்சி. நடுவில் நிற்பவர் தேர்த்திருப்பணிச் சபைத்தலைவரும் வடமாகாண அதிபருமாகிய திரு. ம. ஸ்ரீகாந்தா.




# பொலநறுவைத் திருவுருவங்கள்


(ம. பொ. செல்வரத்தினம் அவர்கள் இலங்கை வானொலியிற் பேசியது)

சோழர் சிற்பக்கலையை, மிக முக்கியமாகச். சோழர் கலாச்சாரத்தின் விளைவால் எழுந்த வெண்கலத் திருவுருவங்களைப்பற்றி ஆராயுமிடத்துத், தென்னிந்திய ஆரம்பக் கலையையும், அது வளர்ச்சியடைந்து சோழர் காலத்தில் உன்னத நிலையடைந்ததும், அறிதற்கு வேண்டியனவாகும். தமிழகத்தில் கட்டடம், சிற்பம், ஓவியமாதிய கலைகளின் சரித்திரத்தைப், பல்லவர் காலத்திலிருந்து தெரிந்துகொள்ளப், போதிய சின்னங்கள் கிடைக்கின்றன. பல்லவருடைய சிற்பக்கலைச் சிறப்பினைக் காஞ்சியிலும், மாமல்லபுரத்திலும் இன்றுங் காணலாம். பல்லவரின் தலைநகராய் விளங்கிய காஞ்சி மாநகர், சிற்பக்காஞ்சியாய் விளங்குகிறது. மாமல்லபுரத்துக் கற்பாறையில் குடைந்தமைந்த ஏழு ஆலயங்கள் 'இரதங்கள்' 'பகோடாக்கள்' என வழங்கப்பட்டுப் பல்லவ சிற்பக்கலைக்கு உதாரணங்களாக விளங்குகின்றன. இந்நகரத்தையும், கலைக்களஞ்சியமாக விளங்கும் ஆலயங்களையும் நிர்மாணித்தவன், கி. பி. 7 ந் நூற்றாண்டளவில் ஆண்ட பல்லவரசன் நரசிங்கவர்மனேயாகும். இவ்வாலயங்களைத் தர்மராஜ ரதம், வீம ரதம், திரௌபதி ரதம் என வழங்குகின்றனர். இவற்றில், அருச்சுனன் தவநிலையைக்காட்டும் ஒரு சிற்பக்காட்சி கலைஞருடைய உள்ளத்தை ஈர்ந்து நிற்கிறது. பல்லவ சிற்பக்கலையை ஆய்ந்துணர்ந்தோர், அது முற்றி முதிர்ந்த கலையென்றே கூறுவர். காஞ்சியையும், மாமல்லபுரத்தையும் நிர்மாணித்த சிற்பிகள் கலைக்குப் புதியவர்கள் அல்லர். ஒரு பெருஞ் சிற்பக்கலைப் பாரம்பரையின் வழித் தோன்றியவர்கள் என்பதையே, இச்சிற்பங்கள் காட்டியமைகின்றன. பல்லவ சிற்பக்கலை தமிழகத்துக்கு ஒரு தரத்தைக் காட்டியதுமன்றி, தூரகிழக்கிலுள்ள இந்தியக் குடியேற்ற நாடுகளிலுள்ள சிற்பக்கலையிலும் ஒரு பெரும் ஆதிக்கம் பெற்றிருந்தது. பல்லவ சிகரங்களின் முக்கிய அம்சங்களை யாவா, கம்போடியா, அன்னம் முதலிய நாட்டு ஆலயங்கள் காட்டுகின்றன. பல்லவர்களைத் தொடர்ந்த சோழர்கள் பிரமாண்டமான கட்டடக்காரர்களாவர். சிற்பக்கலையை வளர்த்ததுமன்றி அதனை

திருஞானசம்பந்த மூர்த்தி



அப்பர் சுவாமிகள்





நடராஜ வடிவம்—தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில் சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய் ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு.


முதிர்ச்சியடையவுஞ் செய்தனர். சோழருடைய சிற்பக் கலைக்குச் சிறந்த உதாரணமாக, மகாமன்னன் இராச ராசனுல் தஞ்சையில் அமைந்த பிருகதீஸ்வரர் ஆலயம் விளங்குகிறதெனலாம். இவ்வாலயச்சிகரம் 190 அடிகள் உயர்ந்து, 14 அடுக்குகளைக் கொண்டது. இராசேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டுவித்தான். இந் நகரத்தை மாளிகைகளும், தடாகங்களும் அமைத்து அலங்கரித்தான்.

இப்பல்வேறு நகரங்களையும் கோபுரங்களையும், மாளிகைகளையுங் காண்போர், சோழர் சிற்பக்கலையில் பிரமாண்டமான தோற்றமே மிக முக்கியமான இயல் பாக விளங்குவதைத் தெரிந்து கொள்ளலாம். மிகப் பிரமாண்டமான கூடகோபுரங்களும், மாடமாளிகை களும், மிகச் சிறிய எண்ணிலடங்காச் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டன. இச்சிறிய, நுணுக்க வேலைப்பாடு கொண்ட சிற்பங்கள் அதிக சிரமத்தாலும், வெகுநாள் சலியாத உழைப்பாலும் எழுந்தவையேதான். இதனைக் கண்ணுற்ற மேல்நாட்டு ஆராய்ச்சியாளராகிய பெர்கூசன் என்பார், 'சோழ சிற்பிகள் இராட்சதர் கள் போன்று கற்பனை பண்ணி, அணிகள் செய்வோர் போன்று முடித்தனர் என்று கூறினர். சோழர் சிற்பக் கலையில் இன்னுமொரு முக்கிய அம்சமாக விளங்குவது கோபுரங்களாகும். காலாந்தரத்தில் இக்கோபுரங்கள் மிக உயர்ந்தும் பிரமாண்டமாக விளங்கியதுமன்றி, நகரங்களெங்கும் மலிந்து விளங்கின. கோபுரம் முக்கியம் பெற்று விளங்கியதால் ஆலயம் பெருந் தோற்றத்தை அளிக்கவில்லை. பிற்காலத்தில், ஆலயத் தைச் சேர்ந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட தூண்கள் கொண்ட மண்டபங்களுட்தூண் வரிசைகளும் அலங் காரமாக விளங்கின.

பல்லவர்கள் கட்டடம், சிற்பமாதிய கலைகளுக்கு வித்திட்டனரெனினும், சோழர் காலத்திலேயே கல்லி லும், வெங்கலத்திலும் திருவுருவங்கள் அமைந்தன. சைவசமய குரவர்களும், வைஸ்ணவ ஆழ்வார்களும் தொடக்கிவைத்த பக்திப் பெருவெள்ளமானது 9ம் நூற்றுண்டு தொடக்கம் 13ம் நூற்றுண்டுவரை பெருக் கெடுத்துப் பாய்ந்ததெனலாம். சைவ சமய நூல்கள் தேவதானத்தை, அதனிலும் பார்க்க மூர்த்திதானத்தை மிக மேலாகப் புகழ்ந்தன. உற்சவ மூர்த்திகள் அதாவது திருவிளாக்காலங்களில் வீதிவலத்துக்கென அமைந்த திருவுருவங்கள் வெண்கலத்தில் அமைந்தன. இவ்வெண் கலத் திருவுருவங்களின் சிறப்பியல்புகளைப்பற்றி ஆராயுமுன், இவை அமைக்கும் முறை, கடைப்பிடிக் குஞ் சிற்ப சாஸ்திர விதிகள், சமயக்கோட்பாடு முதலிய பற்றி அறிதல் இன்றியமையாதது. இவ்வறிவினுலேயே இத் திருவுருவங்களின் தத்துவார்த்தத்தைப்பற்றிப் புரிந்து கொள்ளலாம். இவ்வெண்கலத் திருவுருவங்களின் சிறப்பியல்புகள் குறித்து டாக்டர் ஆனந்தக்குமார சுவாமி அவர்கள், சேர். பொன். அருணுசலம் அவர்கள், ஓ. சி. கங்கூலி அவர்கள், இன்னும் வேறு பல அறிஞர் கள் நூல்கள் எழுதியுள்ளார்கள்.

பொதுவாக, வெண்கல உருவங்கள் செம்பு, வெள்ளி, பொன், பித்தளை, ஈயம் என்ற ஐவகை உலோகங்களின் கலவையினுல் அமைக்கப்படுகிறமையால், இவ்வுருவங் களைப் பஞ்சலோக உருவங்கள் எனச் சிற்பிகள் வழங்கு வர். எந்தெந்த உருவம் வெண்கலத்தில் அமைக்கப்பட வேண்டுமோ, அந்த உருவம் முதலில் மெழுகில் தயாரிக்கப்படுகிறது. இம்மெழுகுருவத்தின்மேல் களி மண் ஒட்டப்படுகிறது. தேவையான இடங்களில் கம்பி கள் பின்னப்பட்டுக் களிமண் பூசப்படுகிறது. இக் களிமண் நன்கு காய்ந்தபின் மெழுகு உருக்கியெடுக்கப் படுகிறது. மெழுகு எடுக்கப்பட்ட இடைவெளியில் உருக்கப்பட்ட உலோகம் வார்க்கப்படுகிறது. உலோகம் நன்கு இறுகிக் காய்ந்தபின்னர், களிமண் உடைக்கப் படுகிறது. பின்பு கூரிய உளிமுதல் வேறு கருவிகள் கொண்டு, இவ்வுருவங்களில் அலங்கார வேலைப்பாடு களைச் சிற்பி செய்கிருன். ஒரு உருவம் நன்கு அமைய


பார்வதி பரமேஸ்வரன்



எத்தனையே நாட்கள் அல்லது மாதங்கள் எடுக்கும். சிற்பாசாரிகள், பரம்பரையாக இக்கலையில் அனுபவமும், தேர்ச்சியும் வாய்ந்தவர்கள். சிற்பாசாஸ்திரத்திலே சொல்லப்பட்ட தியான மந்திரங்களையும், உருவ இலக்கணங்களையும் மனனம்பண்ணி மனத்தில் பதித்திருப்பர். இத்தியான மந்திரங்களை மீண்டும் உச்சாரணம் பண்ணுவதினாலும், சிந்திப்பதினாலும், தெய்வ உருவங்களை அகக்கண்ணால் காண்கிறான் சிற்பி. இதனாலேயே சிற்பி தான் எண்ணிய திருவுருவங்களைப் பெற முடிகின்றது. இத்தன்மையில் தென்னிந்திய சிற்பக்கலை, மேனாட்டுச் சிற்பக்கலையினும் மிக முக்கியமாகக் கிரேக்கக் கலையிலிருந்து வேறுபடுகிறது. கிரேக்கக்கலை உடல் அழகுக்கும், உடல் வலிமைக்கும் முக்கியத்துவங் கொடுத்தது. அழகுக்கலைத் தெய்வத்தை 'அப்போலோ' என்றும் அழகுக்கலைத் தேவதையை 'அபிரோடைற்' என்றும் கிரேக்கக்கலை கொண்டது. 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பறிவு' என்ற வள்ளுவர் வாக்கில் அமைந்தது போன்று, மனம் வாக்குக்கெட்டாத பொருளை, உருவத்தில் தர முற்படுகிறான் இந்தியச் சிற்பி. எவ்வளவு உச்ச நிலைக்குச் சிற்பி தியானத்தில் மூழ்குகிறானே, அவ்வளவுக்குத் தெய்வ உருவங்கள் அகக்கண்ணில் கண்டு வெளியில் உருவாகத் தருகிறான் சிற்பி. 'ஒரு நாமம்' ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரந் திருநாமம் பாடித் தென்னேணங்கொட்டாமோ' என்ற திரு வாசக வாக்குப் போன்று திருநாமத்தோடு திருப்தியடையாது, திருவுருவங்களுங் கண்டனர் புராதனக் கலைஞர்கள்.

இவ்வுருவங்களின் தத்துவார்த்தத்தை அறிதற்கு இவ்வுருவங்கள் தருங் குறிப்பொருளையும் அறிதல் வேண்டும். கரங்களின் நிலைகள் வெவ்வேறு கருத்தை எடுத்துக் கூறுகின்றன. ஒவ்வொரு உருவத்தின் செயலை அதன் கரங்களினதும், விரல்களினதும் சைகைகள் காட்டுகின்றன. இச்சைகைகளைத் திவ்வியக் கிரிகைகள் என்று வழங்குகின்றனர். இவற்றில் தென்னிந்திய உருவங்களுக்கு அமைந்த அபயகரம், வரதகரம் மிக முக்கியமாக விளங்குகின்றன. அஞ்சல் என்றருளி ஆன்மாக்களுக்கு அடைக்கலங் கொடுப்பது அபயகரம். ஆன்மாக்கள் விரும்பும் வரம் அளிப்பது வரதகரம். இதே போன்று விரல்களினது முத்திரைகள் வெவ்வேறு நிலைகளை எடுத்துக் கூறுகின்றன. ஆதலின், இத்திருவுருவங்களின் சிறப்பியல்புகளை அறிதற்கு சைவ சித்தாந்தத்திலும், இந்து மத சாஸ்திரத்திலும் நன்கு பயிற்சி பெற்றிருக்கவேண்டும். இப்பல்வேறு இயல்புகளைக் கொண்டன தென்னிந்திய வெண்கல உருவங்களாகும். இத்தொகுதியில் முக்கியமாக விளங்குகின்றன சோழர் கால வெண்கல உருவங்கள். இவற்றைத் தஞ்சாவூர் கங்கைகொண்ட சோழபுரம், திருப்புவனம், ஆதிய இடங்களில் அமைந்த ஆலயங்களில் காணலாம். இவற்றில் தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்திலிருக்கும்

திரிபங்க உமை



சிவன், நடராஜ உருவங்களும், சென்னைப் பொருட் காட்சிச் சாலையிலிருக்கும் நடராஜ உருவமும் மிகச் சிறந்தவைகளாகும். இத்தொகுதியைச் சார்ந்தவை களே பொலநறுவை விக்கிரகங்களும். இதற்கு மூல காரணமாயிருந்தது சோழர் படையெடுப்பேயாகும். இராசராச சோழன் காலத்தில் (985—1016 கி. பி.) இலங்கை சோழர் படையெடுப்புக்கு வீழ்ச்சி அடைந் தது. இவ்வரசன் இலங்கையைத் தேசாதிபதிகள் மூலம் ஆண்டனன். இலங்கையில் சில கிராமங்களின் வருமானத்தைத் தஞ்சை ஆலயத்துக்கு எழுது வித்தான். பொலநறுவையில் காணப்பட்ட இரா சேந்திரன், அதிராசேந்திரன் காலக் கல்வெட்டுகள் இவ் வாலயத்துக்குக் கொடுக்கப்பட்ட நன்கொடைகளைக் கூறுகின்றன. இவ்வாலயம் 'வானவன் மாதேவீஸ்வரம்' என்று வழங்கப்பட்டது. இக்கல்வெட்டில் காணப்படும் பெயர்கள் தென்னிந்தியாவிலுள்ள திருப்புவனம், திரவையாறு, சிதம்பரம் முதலிய பெயர்களோடு தொடர்புடையனவாய்க் காணப்படுகின்றன. இவ் வரலாற்றால் பொலநறுவை சைவப் பெருமக்கள் கொண்ட குடியேற்றமாய் விளங்கியதென்பது வெளிப் படையாகிறது. பொலநறுவையில் சோழர்கள் சிவாலயங்களைக்கட்டி யெழுப்பியது மன்றிப் பிரபல்யம் வாய்ந்த சைவசமய சம்பந்தமான வெண்கல விக்கிரகங் களையும் கல்லுருவங்களையுந் தாபித்தனர்.

இந்நகரமும், சிவாலயங்களும், சிற்பவேலைப்பாடு களும், பிற்கால யுத்தங்களினால் சிதைவுபட்டன. 1907 ம் 1908 ம் வருடங்களில் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் எச். சீ. பீ. பெல் அவர்கள் நடாத்திய ஆராய்ச்சியில் இவ்விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவ்விக்கிர கங்களில் நடராசன், சிவகாமசுந்தரி, சிவன், பார்வதி, சந்தியாவர்த்தன மூர்த்தி, சங்காரத்தாண்டவ மூர்த்தி, ஆலிங்கன மூர்த்தி, பாலகிருஷ்ணர், சூரியன், நந்தி, சைவசமய குரவர்களாகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சண்டேஸ்வரர் முதலியன மிக முக்கிய மானவைகளாகும். இவ்விக்கிரகங்கள் சைவசித்தாந்தத் திலும், சிற்ப சாஸ்திரத்திலும் பயிற்சியும் அனுபவமும் வாய்ந்த தென்னிந்திய சிற்பிகளால் அமைந்ததென்ப தையே உணர்த்துகிறது. இவ்விக்கிரகங்கள் கொழும்புப் பொருட்காட்சிச் சாலையில் வெண்கல உருவப்பகுதி யிலிருக்கின்றன. பொலனறுவை நடராஜ உருவம் அழகிலும், வேலைப்பாட்டிலும், தஞ்சைப் பிருகதீஸ்வரர் ஆலய நடராஜ விக்கிரகத்தையும், சென்னைப் பொருட் காட்சிச்சாலை நடராஜ விக்கிரகத்தையும் போன்ற தெனலாம். சமய குரவர்களாகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசக சுவாமிகளது உருவங்கள் போன்று தமிழ் நாட்டில் இல்லையென்றே கூறுவர். இவ் வுருவங்களுள் சுந்தரமூர்த்தி நாயனாரது சுந்தரவடிவம் ஓர் அற்புத சிற்பமாய் அமைந்துள்ளது. சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் தடுத்தாட் கொண்டு திரு வெண்ணை நல்லூர் ஆலயத்தில் அவருக்குக் காட்சி யளித்தபோது, ஆனந்தபரவசமாய், 'பித்தாபிறை சூடிப் பெருமானே யருளாளாய்' என்று திருப்பதிகம் பாடினார். இந்நிலையில் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் வாய்ந்த திருக்கோலப்பொலிவை, இவ்வுருவம் எடுத்துக் காட்டுகிறதெனலாம். சுந்தரமூர்த்தி நாயனாரின் பேரானந்தப் பரவச நிலையைத் திருத்தொண்டர் புராண ஆசிரியராகிய சேக்கிழார் சுவாமிகள்

ஐந்து பேரறிவுங்கண்களே கொள்ள
அளப்பருங்கரணங்க ளான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்துவாழ் சடையனாடு மானந்த
எல்லையிற் றனிப் பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மகிழ்ந்தார்.

எனச் சொல்லோவியமாகத் தந்துள்ளார்.

இச்சொல்லோவியத்தை உயிரோவியமாகச் சிற்பி தந்துள்ளார் என்று கூறில் மிகையாது. சுந்தரமூர்த்தி சுவாமிகளது இரு உருவங்களும், திருமணக்கோலத்தில் நின்ற பாவனையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் நாயனாரது உருவங்களும் அவரவர் வாழ்க்கைக் கே உருவாக விளங்குகின்றன. திருநாவுக்கரசர் உடல் பொருள் ஆவியை இறைவன் திருப்பணிக்கே அர்ப்பணம் பண்ணினர். இறுதியில் சைவாலயங்களில் உளவாரப்பணியும் புரிந்தனர். ஆதலின் உடலங்கங் களெல்லாம் தேய்ந்த நிலையில் உளவாரந்தோளில் கொண்டு திருநாவுக்கரசர் காட்சி அளிக்கிறார். திரு ஞானசம்பந்தரோவெனில், பச்சிளங் குழந்தையா யிருக்கும்போதே இறைவனை நோக்கி 'அம்மையே அப்பா' என்று பாடினார். மிக இளமையிலேயே ஞானப் பேறினையும் பெற்றமையால், திருஞானசம்பந்தர் என்று பெயரும் பெற்றனர். தேவாரம் பாடிய செல்வக் குழந்தையாதலின் குழந்தைக்கேற்ப சிறு தோற்றத் தோடு கையில் தாளங்கொண்டு நிற்கிறார் திருஞான சம்பந்தர். மாணிக்க சுவாமிகள் சகல கலா பண்டிதராய் விளங்கித் திருவாசகம், திருக்கோவையார் முதலிய பாடினார். ஓர் பெருஞ்ஞானியாய் விளங்கியவராதலின், தலையில் உருத்திராக்கமும், ஒரு கரத்தில் ஏட்டுச்சுவடி யும், மற்றக் கரம் விதர்க்கமுத்திரையை அதாவது ஞானோபதேசத்தைக்காட்டி அமைகிறது. சண்டேஸ் வரரது உருவமும் ஆனந்த பரவச நிலையை நன்கு எடுத்துக்காட்டுகிறது. சண்டேஸ்வரருக்குமுன் சிவ பிரான் தோற்றி, அவருக்கு மலர்மாலை அணிவித்துச் சன்மானித்தபோது அவர் பெருமையுடன் துதித்த கோலத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | | விலை ரூ. ச. | | தபாற் செலவு சதம் |
|---|---|---|---|---|
| 1. | இலங்கைக் கல்வி முறைச் சீர்திருத்தம் சம்பந்தமாய ஆலோசனைகள் .. .. .. .. | 55 | .. | 10 |
| 2. | அரச்ாங்க பாஷைக் கொமிஷனின் நான்காவது இடையறிக்கை .. | 50 | .. | 15 |
| 3. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் ஐந்தாவது இடையறிக்கை .. | 1.20 | .. | 35 |
| 4. | இந்து ஆலயங்களும் தரும நம்பிக்கைச் சொத்துகளும் .. | 70 | .. | 15 |
| 5. | இந்து மத அறநிலையங்கள், ஆதீனங்கள் முதலியவை பற்றிய விசேஷ விசாரணைச் சபையின் அறிக்கை 1951 ம் ஆண்டு ஜூன் மாதம் .. .. .. | 2.00 | .. | 35 |
| 6. | இலங்கைக் குடிமதிப்பு—1946 .. .. .. | 5 00 | .. | 35 |
| 7. | 6 ம், 7 ம், 8 ம் வகுப்புகளில் கல்வியூட்டும் மொழிகளாக தேசீய மொழிகளை இலகுவில் அமைத்துக்கொள்வதற்கான சிபார்சுகளைச் செய்தற்கு நியமிக்கப்பட்ட சபையின் அறிக்கை .. | 1.45 | .. | 35 |
| 8. | இலங்கை அரசியற் சீர்திருத்த விசாரணைச் சபையின் அறிக்கை—1945 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் .. .. | 2.00 | .. | 35 |
| 9. | சுகாதார சேவைகளின் பதில் அதிபரது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. .. .. | 1.55 | .. | 35 |
| 10. | குடிமதிப்பு புள்ளிவிபர தற்காலீக அதிபரினது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. .. | 60 | .. | 20 |
| 11. | இலங்கைப் பறவைகள்—சித்திரசகித நூல் .. .. | 5.00 | .. | 35 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,

தபால் பெட்டி நிர். 500,

கொழும்பு 1.

என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற்பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.